Vol.38 Issue No.20 2025 ஜூன் 25-27 ரூ.30

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

NAKKHEERAN

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே'

நெ.1 ப... ...மறை இதழ்



## உடன்பிறப்பே வா! சந்திப்பில் நடப்பது என்ன?

# பிரிவினை அரசியல்!

## நீதிமன்றத்தை அவமதித்த முருகன் மாநாடு!

தி.மு.க. பவர் சென்டர்களுடன் வேலுமணி! எடப்பாடி ஷாக்!



கலைஞர் அறிவாலயம்
கலைஞர் சிலை திறப்புவிழா
பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் கலந்துக்கொள்ள...
வேலூர் மாவட்டத்திற்கு
வருகைத்தரும்..
மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களே
வருக! வருக!!
பேரன்புடன்...ஏ.பி.நந்தகுமார் MLA.,
மாவட்ட கழக செயலாளர்
அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர்
வேலூர் மாவட்ட தி.மு.க




advt



பவன் கல்யாணுக்கு முருகர் சிலை வழங்கும் நயினார்

# நீதிமன்றத்தை அவமதித்த முருகன் மாநாடு!



திருப்பரங்குன்றம் தர்காவில் ஆடு, கோழி நேர்த்திக்கடனுக்கு எதிராகக் களமிறங்கிய இந்து முன்னணி, பா.ஜ.க.வினரின் அடுத்த பாய்ச்சல்தான் மதுரையில் முருக பக்த மாநாடு. கடந்த ஒரு மாதமாக 'குன்றம்காக்க கோயில் காக்க!' என்ற அழைப்பிதழோடு ஒவ்வொரு குக்கிராமங்களிலும் மக்களைத் திரட்டி, ஜூன்-22-ல் மதுரை பாண்டி கோவில் ரிங் ரோடு அருகே அம்மா திடலில் முருக பக்தர்கள் மாநாட்டை நடத்தினர்.

மதியம் மூன்று மணிக்கு கலைநிகழ்ச்சி களுடன் மாநாடு தொடங்கினாலும் மாநாடு நடந்த பகுதியைச் சுற்றி 'தமிழ்க் கடவுள் முருகனுக்கு தமிழில் வேதம் ஓதவேண்டும் என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றத் தயாரா? முருகனின் ஆறுபடை வீடுகளிலும் தமிழ் அர்ச்சகர்களை நியமிக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றத் தயாரா?' என்ற போஸ்டர்கள் காணப்பட, கொஞ்சம் பதட்டமாயினர் பா.ஜ.க.வினர்

இதுகுறித்து இந்து முன்னணியினர் காவல்துறையினரிடம் புகார் தெரிவிக்க, போஸ்டர்கள் கிழிக்கப்பட்டன. போஸ்டர் ஒட்டிய தமிழர் தேசிய கழகம், மூவேந்தர் புலிப் படையைச் சேர்ந்தவர்கள் இதற்கெதிராக வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவர்களை அப்புறப்படுத்தினர் காவல்துறையினர். மாநாட்டுக்கு தமிழகம் முழுவதிலுமிருந்து ஆதீன மடாதிபதிகள் வந்திருந்தனர். ஆந்திர துணை முதலமைச்சர் பவன்கல்யாண், பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர், இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம், ஆர்.எஸ்.எஸ். நிர்வாகிகள் வருகைதந்திருந்தனர். மதுரை ஆதீனத்திற்கு அழைப்பிதழ்கொடுத்தும் அவர் கலந்துகொள்ளவில்லை. ஆனால் அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி. உதயகுமார், ராஜன்செல்லப்பா, செல்லூர்ராஜு, கடம்பூர் ராஜு, ராஜேந்திரபாலாஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள்

**இலங்கைக்குக் கடத்த முயன்ற 90 கிலோ கஞ்சா பறிமுதல்**

## பிரிவினை அரசியல்!

திருச்செந்தூர் சூர சம்ஹாரத்திற்கு பத்து லட்சம் பேர் கூடுவார்கள். திருவண்ணாமலை தீபத்திற்கு இருபது லட்சம் பேர் கூடுவார்கள். திருச்செந்தூரில் இருந்து திருத்தணி வரை உள்ள முருகனின் அறுபடை வீடுகள் அனைத்தையும் ஒரே இடத்தில் கொண்டுவந்திருக்கிறோம். அறுபடை வீடுகளுக்கும் நீங்கள் செலவு செய்து அலைவதை விட அறுபடை வீடும் ஒரே இடத்தில் இருக்கிறது. இன்ஸ்டாகிராமில் நூறு பேரை காசுக்கு வாங்கி மிகப்பெரிய அளவில் ஒரு சமூக வலைத்தள பிரச்சாரத்தை இந்து முன்னணியும், பா.ஜ.க.வும் கட்டவிழ்த்து விட்டதுதான் முருகன் மாநாட்டின் ஹைலைட். சமூக வலைத்தளங்கள் மூலம் செய்த எலக்ட்ரானிக் பிரச்சாரம் மற்றும் அறுபடை வீடுகளை செட் போட்டு மாநாட்டில் நிறுத்தியது அவர்களுக்கு பெரிய அளவில் கை கொடுத்தது.

எண்பதாயிரம் இருக்கைகள் போடப்பட்ட அந்த மாநாட்டில் திருச்செந்தூரிலும் திருவண்ணாமலையிலும் கூடிய பக்தர்கள் போல நாப்பதாயிரம் பெண்கள் இருக்கைகளில் அமர்ந்தார்கள். காலையிலேயே அழைத்து வரப்பட்ட அவர்கள் தரிசனம் முடிந்ததும் புறப்படத் தயாரானார்கள். மாலையில் நடக்கும் அரசியல் மாநாட்டில் இருக்க வேண்டும் என இந்து முன்னணியினர் பெண்களுக்கு கட்டளை இட்டனர். ''சாமி பாக்க வந்தோம், சாமிய பாத்துட்டோம், நாங்க கிளம்புறோம்'' என பல பெண்கள் இந்து முன்னணியினரிடம் சண்டை போட்டார்கள். அவர்களை கெஞ்சிக் கூத்தாடி அமரவைத்த இந்து முன்னணியினரை மீறி பெண்களில் ஒரு பெரும் பிரிவினர் கிளம்பிப் போய்விட்டார்கள். பெண்களில் பலருக்கும் உணவு விநியோகிக்கப்படவில்லை.

நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து 'திருப்பரங்குன்றம் மலைமேலுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றவேண்டும், பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடியாக ஆபரேசன் சிந்தூரை நடத்திய பிரதமருக்கு நன்றி, திருப்பரங்குன்றம் மலையைக் காக்கும் வகையில் குன்றம் குமரனுக்கே எனத் தீர்மானம், எந்த தேர்தலாக இருந்தாலும் இந்து வாக்குகள் ஒன்றாக இருக்கவேண்டும், மாதம்தோறும் எல்லோர் வீட்டிலும், கோவிலிலும் சஷ்டி நாளில் கந்தசஷ்டி கவசம் பாடவேண்டும்' என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன்பின் முன்னாள் பா.ஜ. தலைவர் பேசியபோது, "இரண்டு நாட்களுக்கு முன்பாக திருப்பரங்குன்றம் கோவிலுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், அங்கு அவர் நெற்றியில் வைக்கப்பட்ட திருநீறை அழித்துவிட்டு செல்ஃபி எடுக்கிறார். அவர் ஓட்டுப் பிச்சைக்காக நம்மிடம் வருவார்'' என திருமாவளவனை ஒருமையில் சாடினார். "2055-ல் இஸ்லாமியர் பெரும்பான்மையாக இருக்கும்படி இஸ்லாமியர் மக்கள் தொகை உயர்ந்துகொண்டிருக்கிறது. 120 கோடியுள்ள நமது இந்துக்கள் மதம் மாறிவிடக் கூடாது. முருகனின் முதல் வீடு திருப்பரங்குன்றத்திற்கு பிரச்சினை செய்தால், சூரசம்ஹாரம் செய்துவிட்டு, திருத்தணிக்குச் சென்றுவிடுவோம்" என்றார்.

அடுத்து பேசிய ஆந்திர துணைமுதல்வர் பவன்கல்யாண், ''தீயவர்களை வதம்செய்து அநீதியை அழித்தவர், உலகின் முதல் புரட்சித்தலைவர் முருகப்பெருமான். அந்த முருகப்பெருமானுக்காக இங்கு வந்துள்ளோம். முருகன் மாநாட்டை ஏன் குஜராத்தில், உ.பி.யில்

மாநாட்டு மேடையில்...





www.nakkheeran.in

பெண்கள் எப்படி உடையணிய வேண்டும், இந்து தர்மத்தின்படி எப்படி நகை அணிய வேண்டும் என இந்து முன்னணியினர் வைத்த பேனர்கள் பெண்களை முகம் சுழிக்க வைத்தது. கடுப்பில் இருந்த பெண்களும் ஆண்களும் மாலை மாநாட்டின் தொடக்கத்திலேயே கலைந்து போக ஆரம்பித்தார்கள்.

ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் பேசியது மக்களுக்குப் புரியவில்லை. இந்து முன்னணியின் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் கொங்கு பகுதியை சேர்ந்தவர். ஆடுமலைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். அத்துடன் அவர் மேடைக்கு வந்ததும் பா.ஜ.க. தொண்டர்கள் மதுரை மாவட்டத் தலைவர் சுரேந்தர் தலைமையில் வரவேற்று ஆரவாரம் செய்தனர். இந்த செட்டப்பை பார்த்து எரிச்ச லடைந்த நயினார் நாகேந்திரனை மேடையில் பேசவே காடேஸ்வரா சுப்ரமணியம் அனுமதிக்கவில்லை. சண்டை போட்ட பிறகுதான் நயினாரே பேசினார். வருகின்ற சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு இந்து அமைப்புக்களின் பலத்தைக் காட்டவே இந்த மாநாடு நடந்தது. இதில் கூடும் கூட்டம் பா.ஜ.க.விற்கு அதிக சீட்டுக்களை பெற்றுத்தரும் என தமிழகம் முழுவதும் காசு கொடுத்து ஆள் திரட்டினார்கள். அப்படித் திரட்டியும் ஒரு லட்சத்தைத் தாண்ட அவர்களால் முடியவில்லை. பதினைந்து நாட்கள் உழைப்பு, நீதிமன்றத்தில் போராட்டம் முருகன் மாநாட்டில் அரசியலே இல்லை என்ற அறிவிப்பு, முருகன் கோவில் வழிபாடு. சமூக வலைத்தளப் பிரச்சாரம் என தங்களுக்குத் தெரிந்த அத்தனை வித்தைகளையும் செய்தனர். மொத்தத்தில், மதரீதியாக மக்களிடம் பிரிவினையை ஏற்படுத்த நடத்தப்பட்ட இந்த மாநாடு மக்களின் அதிருப்தியால் தோல்வியில் முடிந்திருக்கிறது.

**-தாமோதரன் பிரகாஷ்**

---

*நடத்தலாமே என சிலர் கேட்கிறார்கள். இந்த சிந்தனை ஆபத்தானது. முருகன் தமிழ்க் கடவுள் அதனால் தமிழ்நாட்டில் நடத்துகிறோம். எங்கள் மதத்திற்கு மரியாதை கொடுக்காவிட்டாலும் அவமரியாதை செய்யாதீர்கள். சீண்டிப் பார்க்காதீர்கள். சாது மிரண்டால் காடுகொள்ளாது" என்று மிரட்டல் விடுத்தார்.*

*ஆர்.எஸ்.எஸ். தலைவர் வன்னிராஜன் பேசுகையில் "ஆனந்தமான நாள் இன்று. தமிழகத்தில், இந்து சமுதாய மனப்பான்மையில் மாற்றம் கொண்டுவரக்கூடிய மாநாடு இந்த மாநாடு. இந்த மாநாட்டின் வெற்றி பெரிய எண்ணிக்கையில் திரண்டுள்ளதுதான். இடைக்காலத்தில் சமுதாயத்தில் சில குளறுபடி வந்தது, சமுதாயத்தில் மாற்றம்வேண்டும். இதே போன்று 6 நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுள்ளோம்'' என ஆர்.எஸ்.எஸ்.ஸின் அடுத்த நகர்வுகளை கோடிகாட்டினார்.*

*அடுத்துப் பேசிய பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், "மதுரை மண்ணில் இருந்து தமிழகத்திற்கு மாற்றம் வந்திருக்கிறது. இந்துக்களின் ஒற்றுமையைப் பார்த்து பரவசமடைகிறேன். நாம் நினைத்ததை அடைந்துவிடுவோம், வென்றுவிடுவோம்'' என்று முடித்துக்கொண்டார்.*

*இந்த மாநாடு குறித்து தமிழ்நாடு அர்ச்சகர் பயிற்சிபெற்ற மாணவர்கள் சங்க தலைவர் ரங்கநாதனிடம் பேசியபோது, "இந்த மாநாடு ஆன்மீக மாநாடு அல்ல, இது முழுக்க முழுக்க அரசியல் மாநாடு. இதில் ஆன்மீகம், தமிழ் மரபு, தமிழனுடைய கலாச்சாரம் அனைத்தையும் மீறியுள்ளார்கள். அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இந்த மாநாடு நடந்துள்ளது" என்றார்.*

*வழக்கறிஞர் வாஞ்சிநாதனோ, "முருக பக்தர் மாநாட்டில் அரசியல் சார்ந்தோ மற்ற மதங்களைப் பற்றியோ பேசக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இந்த மாநாடோ அனைத்தையும் மீறி நீதிமன்ற அவமதிப்பு செய்துள்ளது. மாநாட்டில் திருப்பரங்குன்ற மலைத் தூணில் தீபம் ஏற்றப்படும் என்றொரு தீர்மானம். அந்த தூண் சிக்கந்தர் தர்காவின் அருகில் உள்ளது. திராவிட மாடல் அரசு இப்போதாவது சுதாரித்துக்கொள்ள வேண்டும். ஆடுமலை, பவன்கல்யாண், நயினார் நாகேந்திரன், மற்றும் ஆர்.எஸ்.எஸ். தலைவர் ஆகியோர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வழக்கு தொடரவிருக்கிறோம்" என்றார்.*

**-அண்ணல்**



அறிவாலயத்தில்...

# உடன்பிறப்பே வா! சந்திப்பில் நடப்பது என்ன?

சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் 8 மாதங்களே இருக்கும் நிலையில், தேர்தல் களத்தில் முதல் ஆளாய் தேர்தல் பணிகளை முன்னெடுத்து வரும் தி.மு.க., அந்த பணிகளில் வேகம்காட்டி வருகிறது.

மதுரை பொதுக்குழுவில், 'உடன்பிறப்பே வா' என்ற பெயரில் தி.மு.க. நிர்வாகிகளையும், தொண்டர்களையும் தொகுதிவாரியாக நானே ஒன் டு ஒன் சந்தித்து ஆலோசிப்பேன் என்றும் தெரிவித்திருந்தார். அந்த வகையில், தொகுதி வாரியாக உடன்பிறப்புகளை சந்தித்து வருகிறார் ஸ்டாலின்.

ஒன் டு ஒன் சந்திப்பில் கலந்துகொண்ட உடன்பிறப்புகள் சிலரிடம் பேசினோம்.

சங்கராபுரம் ஒன்றிய செயலாளர் ஒருவரிடம் நாம் பேசியபோது, ''எங்கள் மாவட்டத்துக்கு தலைவர் வரும்போதெல்லாம் அவருக்கு பிரமாண்டமான வரவேற்பு கொடுத்து மகிழ்ந்திருக்கிறோம். ஆனால், அதேபோன்ற வரவேற்பு தொண்டர்களுக்குத் தலைவர் கொடுத்ததில் எங்களுக்குத் தலை கால் புரியவில்லை. அத்தனை மகிழ்ச்சி. அறிவாலயத்தில் நுழையும்போது, 'உடன்பிறப்பே வா' என்ற அழைப்பு எங்களை மெய்சிலிர்க்க வைத்தது.

மேலும், சாதனை விளக்க பேனர்கள், தலைவர் செல்ஃபி பாயிண்ட், புகார் பெட்டி என புதிய சிந்தனையில் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தொண்டர்களுக்கு இவ்வளவு சிறப்பான வரவேற்பு வேறு எந்த கட்சியிலும் நிகழாத சம்பவம்'' என்றார் பெருமிதமாக.

பரமக்குடி தொகுதி தி.மு.க. நிர்வாகி ஒருவரிடம் பேசியபோது, ''தலைவரை நான் சந்திப்பேன் என்றோ, தனிப்பட்ட முறையில் என்னிடம் அவர் பேசுவார் என்றோ நான் நினைக்கவே இல்லைங்க. ஆனா, அத்தனையும் நடந்தது. தொகுதியில் உள்ள குறைகள், கட்சியினரின் செயல்பாடுகளில் உள்ள பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் தயக்கமின்றி, பயமின்றி என்னிடம் பகிர்ந்துகொள்ளலாம் எனச் சொன்னார் தலைவர். அதுவே எனக்கு பெரிய கௌரவம். தொகுதியின் நிறைகுறைகளை எடுத்துச் சொன்னேன். அவரே அதனை குறித்தும்கொண்டார். கலைஞரை நேரில் பார்த்ததுபோல இருந்தது'' என்றார் நெகிழ்ச்சியாக.

ஸ்டாலினின் ஒன் டு ஒன் ஆலோசனை எப்படி நடக்கிறது என்பதை விசாரித்தோம். ''நிர்வாகிகள் ஒவ்வொருவராக உள்ளே அனுப்பி வைக்கப்படுகின்றனர். முதல்வர் ஸ்டாலினுடன் ஆர்.எஸ். பாரதி, அன்பகம் கலை, தலைமைக் கழக நிர்வாகிகள் அந்த அறையில் இருக்கின்றனர். அதே சமயம், மா.செ.க்கள், அமைச்சர்கள் என யாரும் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. நிர்வாகிகள் சொல்லும் குறைகளை, குற்றச்சாட்டுகளை தலைமைக் கழக நிர்வாகிகளிடம் விவரித்து, உடனடி நடவடிக்கை எடுக்கச்சொல்லி அறிவுறுத்துகிறார் ஸ்டாலின்'' என்றனர்.

இது குறித்து ஸ்டாலினை சந்தித்துவிட்டு வந்த நிர்வாகிகள் சிலரிடம் நாம் விசாரித்தபோது, ''அறைக்குள்



கோவில்பட்டியில் வாலிபரை அரிவாளால் தாக்கி கொலை மிரட்டல்: 5 பேர் கைது


திருப்பத்தூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை திறப்பு விழா மற்றும் 24 கோடியில் வாணியம்பாடி
அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடம் திறப்பு விழா, 25000 பயனாளிகளுக்கு நல திட்ட உதவி வழங்கும் விழாவிற்கு வருகை தரும்
திராவிட மாடல் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு
மு.க.ஸ்டாலின் அவர்களை
மாண்புமிகு நீர்வளத்துறை மற்றும், சட்ட துறை அமைச்சர்
அண்ணன். துரைமுருகன் அவர்களை
மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு, துறைமுகங்கள்துறை அமைச்சர்
எதிலும் வல்லவர் அண்ணன் எ.வ.வேலு அவர்களை
திருமிகு அண்ணன் க.தேவராஜி MLA. அவர்களை
திருமிகு அண்ணன் D.M.கதிர்ஆனந்த் MP. MBA., (USA) அவர்களை
வருக! வருக!!
என
வணங்கி வரவேற்கும்
இவண்: V.S.சாரதிகுமார் BE., MC.,
நகர செயலாளர் கிழக்கு / நகர மன்ற உறுப்பினர் / மு.தலைவர் நகர கூட்டுறவு வங்கி.
உமாசிவாஜிகணேசன் B.Sc.,
நகர மன்ற தலைவர் வாணியம்பாடி
K.கயாஸ்அகமத் MC.
நகர பொருப்பாளர் மேற்கு
G.முகமத்ஜான்
K.தென்னரசு
M.குபேந்திரன்
V.பத்மாவதி MC.
V.ஜீபிடர்சுந்தர்
மா.பா.சாரதி MC.
J.ரவி
S.அருள்
கி, மே, நகர தி.மு.க. வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.
நண்பன் டிஜிட்டல்
9566669684

மத்தியபிரதேசத்தில் வீடு புகுந்து துப்பாக்கி முனையில் பெண்ணையும், 2 குழந்தைகளையும் கடத்திச்சென்ற கும்பல்



## இறுதிச்சுற்று! அன்புமணிக்கு, ராமதாஸ் அதிர்ச்சி வைத்தியம்!

*பா.ம.க.வில் அன்புமணி ஆதரவாளர்களின் கட்சிப் பதவியை டாக்டர் ராமதாஸ் நீக்குவது தொடர்கதையாகி வருகிறது. முதல்முறையாக எம்.எல்.ஏ. ஒருவரின் கட்சிப் பதவியை நீக்கி, அன்புமணிக்கு அதிர்ச்சி வைத்தியம் தந்துள்ளார் ராமதாஸ். சேலம் மேட்டூர். தொகுதி பா.ம.க. எம்.எல்.ஏ.வாக இருக்கும் சதாசிவம், பா.ம.க.வின் சேலம் மேற்கு மா.செ.வாக இருந்துவருகிறார். இவர், அன்புமணியின் ஆதரவாளர். ராமதாஸ் கூட்டிய எந்த ஒரு கூட்டத்திலும் இவர் கலந்துகொள்ளவில்லை. இந்த நிலையில், சதாசிவத்திடமிருந்த கட்சிப் பதவியை திங்கள்கிழமை அன்று (23-06-2025) அதிரடியாக பறித்துள்ளார் ராமதாஸ். சதாசிவத்திடம் பறிக்கப் பட்ட பதவியில் வெடிக்காரனூர் ராஜேந்திரன் உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த பறிப்பும் நீக்கமும் பா.ம.க.வில் மீண்டும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.*

**-இளையர்**

சென்றதும் தனக்கு அருகிலேயே அமரச் சொல்கிறார் தலைவர். அமர்ந்ததும், 'குறைகள் எதுவாக இருந்தாலும் தைரியமாகச் சொல்லுங்கள். இந்த அறையில் உங்களை தடுப்பதற்கோ, சமிக்ஞை செய்வதற்கோ யாரும் இல்லை. உண்மைகளை மட்டும் சொல்லுங்கள்' எனச் சொல்கிறார். அவர் கொடுத்த தைரியம், எங்களை இயல்பாகவும் பதட்டமில்லாமலும் பேசவைத்தது. தலைவரிடம் ஒரு ரிப்போர்ட் இருக்கிறது. அதைவைத்து நாங்கள் சொல்வதையும் சரி பார்த்துக்கொள்கிறார். அதில் ஏதேனும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தால் எங்களிடம் கேள்வி கேட்கிறார். அதற்கு சரியான விளக்கம் சொன்னால், சபாஷ் என பாராட்டவும் செய்கிறார் தலைவர். 'என்னை மீறி எதுவும் யாரும் செயல்பட முடியாது. உங்களுக்கு நான் இருக்கிறேன். உற்சாகமாகவும் உண்மையாகவும் தேர்தல் பணிகளை முன்னெடுங்கள். உங்களுக்கான அங்கீகாரம் உரிய வகையில் வந்தே தீரும்' என நம்பிக்கை கொடுக்கிறார் தலைவர்'' என்றனர்.

ஸ்டாலின் நடத்திவரும் 'உடன்பிறப்பே வா' சந்திப்பு அ.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளிடமும், அரசியல் விமர்சகர்களிடமும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக, இந்த சந்திப்பில் ஸ்டாலினின் அணுகுமுறை என்ன? என்ன மாதிரி வியூகம் வகுக்கப்படுகிறது? என்பது குறித்து அறிந்து கொள்ள அ.தி.மு.க.வினரும், பா.ஜ.க.வினரும் படாதபாடுபடுகின்றனர்.

அரசியல் விமர்சகர்கள் சிலரிடம், உடன்பிறப்பே வா குறித்து விவாதித்தபோது, ''தேர்தல் நெருங்கி விட்டாலே தி.மு.க. முன்னெடுக்கும் பணிகளை அடித்துக்கொள்ள யாராலும் முடியாது. கலைஞர் இதனை பலமுறை நிரூபித்திருக்கிறார். குறிப்பாக, நிர்வாகிகளுடனும் தொண்டர்களுடனும் விவாதிப்பதை முதன்மையாக கொண்டிருப்பார். அதே பாணியைத் தான் ஸ்டாலினும் கையிலெடுத்துள்ளார்.

இப்படிப்பட்ட சந்திப்புதான் கட்சியினரை கட்டுக்கோப்பாக வைத்திருக்க உதவும். இந்த சந்திப்பில் சொல்லப்பட்ட, விவாதிக்கப்பட்ட பிரச்சனைகளின் அடிப்படையில் ஸ்டாலின் நடவடிக்கை எடுத்தால்தான் அவர் மீது தொண் டர்களுக்கு நம்பிக்கை வரும். அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுப்பதற்காகத்தான் இந்த ஒன் டு ஒன் நிகழ்வை நடத்துகிறார்.

மிக வலிமையும், தொண்டர்கள் பலமும் கொண்ட தி.மு.க.வின் தலைவர், தொண்டர்களை தனது அருகில் அமரவைத்து குறைகளைக் கேட்பது ஒரு வரலாற்று நிகழ்வுதான்'' என்று கூறுகின்றனர்.

ஒவ்வொரு நாளும் மூன்று மணி நேரம் தொண்டர்களை சந்தித்து உரையாடுவதில் தொண்டர் களைப்போல ஸ்டாலினும் உற்சாகமாகி விடுகிறார் என்கின்றனர். கட்சிப் பிரச்சனைகளைக் கடந்து தொண்டர்களிடம் அவர்களின் தனிப்பட்ட விசயங்களையும் கேட்டு ஆச்சரியப்படுத்துகிறாராம் ஸ்டாலின். கடந்த வாரம், தென் மாவட்ட தொகுதி ஒன்றின் நிர்வாகியிடம், ''நீங்கள் இஸ்லாமிய பெண் ஒருவரை லவ் மேரேஜ் பண்ணியிருக்கீங்கதானே... அதுவும் போராடி திருமணம் செய்திருக்கிறீர்கள். வாழ்க்கை எப்படி இருக்கிறது, பிரச்சனைகள் ஏதும் இல்லையே?'' என்று ஸ்டாலின் விசாரிக்க... அந்த நிர்வாகியின் கண்களில் ஆனந்தக்கண்ணீர். அந்த கண்ணீரோடு, ''எந்த பிரச்சனையும் இல்லை தலைவரே! வாழ்க்கை நன்றாகப் போகிறது. நீங்கள் இப்படி என்னிடம் விசாரித்ததே இன்னும் அதிகமாக கட்சிக்காக உழைக்கச் சொல்கிறது'' என்று நெகிழ்ச்சியாக சொல்லியிருக்கிறார். உடன்பிறப்பே வா நிகழ்வை விறுவிறுப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார் ஸ்டாலின்.

**-இரா.இளையசெல்வன்**

www.nakkheeran.in

## பாரம்பரியமிக்க சித்த மருத்துவ சிகிச்சை

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் – 7.
: 98427 22500, 98427 13500 ☎ : 0427 - 4265300 E-mail : sales@sivarajsiddha.com

7 தலைமுறைகள், 212 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட எங்கள் வைத்திய சாலையில் தவறான பழக்கவழக்கத்தால் ஏற்பட்ட ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி, ஹார்மோன் குறைபாடு, உயிரணுக்கள் குறைவு, இல்லறத்தில் பிரச்சினை, குழந்தையின்மை, ஆண்களுக்கான குறைபாடுகள், கருவுற்றல் கோளாறுகள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு சித்த மருத்துவம் மூலம் தலைசிறந்த மருத்துவர்களை கொண்டு சிறந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

**தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை**



Dr.சிவராஜ் சிவகுமார்

### சென்னை கிளை
10/4 வீரபத்திரன் தெரு, வள்ளுவர் கோட்டம் அருகில், VIP கேட்டின் எதிரில், நுங்கம்பாக்கம், சென்னை–34.
M: 97888 27500, 044-28230072

### ஈரோடு கிளை
பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில், கோவை மெடிக்கல் ரோடு வழியாக, 36, காந்தி நகர், வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
M: 98427 39500, 0424-2259332

### ஒசூர் கிளை
M-13, ஆவலப்பள்ளி ஹட்கோ, ஸ்டேட் பேங்க் பின்புறம் அத்வைத் பள்ளி அருகில், பாகலூர் ரோடு, ஒசூர்.
M : 81108 03500

### திருப்பத்தூர் கிளை
88/3, காந்தி ரோடு, GH எதிரில்
M: 74488 11500



Dr.சிவராஜ் சிபி

## ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)

**திருச்சி**
1ம், 9ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் அபிராமி
சென்ட்ரல் பஸ்நிலையம், பெரியார் சிலை அருகில்.

**திருப்பூர்**
1ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை
14ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
SAP ரெஸிடென்ஸி
111, முனிசிபல் ஆபீஸ் ரோடு.

**தஞ்சை**
2ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காசி இன்
1493, தெற்கலங்கம், பழைய பேருந்து நிலையம்.

**கும்பகோணம்**
2ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் திருமால்
ஜான்செல்வராஜ் நகர், புதிய பஸ்நிலையம் அருகில்.

**நாகர்கோவில்**
2ம் தேதி.
காலை 6 முதல் மாலை 5 வரை,
ஹோட்டல் கங்கா பேலஸ்
K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன்.

**நெல்லை**
3ம், 23ம் தேதியும்,
காலை 6 முதல் மாலை 5 வரை,
பரணி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**விழுப்புரம்**
3ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஆதித்யா
தேர் விநாயகர் கோவில் & புதிய பஸ்நிலையம் எதிரில், கே.கே.நகர்.

**காஞ்சிபுரம்**
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
வசந்த் வில்லா
T.K.நம்பி வீதி, வெங்குடி மருத்துவமனை & பெண்கள் காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில்.

**மதுரை**
4ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
காலேஜ் ஹவுஸ்
டவுன் ஹால் ரோடு.

**கள்ளக்குறிச்சி**
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
AKT லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

**தேனி**
7ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் தேனி இண்டர்நேசனல்
பழைய பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**திண்டுக்கல்**
8ம், 24ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஐஸ்வர்யா
ஸ்பென்ஸர் காம்பௌண்ட், பஸ் நிலையம் எதிரில்.

**திருவண்ணாமலை**
9ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி.

**வேலூர்**
11ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ்
3, தென்னைமரம் தெரு.

**கடலூர்**
11ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் CAR லாட்ஜ்
62, லாரன்ஸ் ரோடு.

**சிதம்பரம்**
11ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஜெயராம்
35, 36, SP கோயில் தெரு.

**மாயவரம்**
12ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
அல்-முஜம்மில் லாட்ஜ்
பழைய பஸ்நிலையம் அருகில்.

**நாகப்பட்டினம்**
12ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
நியூ குமார் லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

**மன்னார்குடி**
13ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காவேரி லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

**புதுக்கோட்டை**
13ம் தேதி, மதியம் 2 முதல் மாலை 5 வரை
26ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ராயல் பார்க்
புதிய பஸ்நிலையம் எதிரில்.

**கோவை**
13ம், 26ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
OYO ROOMS (கோடா ஓட்டல்)
294, ராஜவீதி, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ் எதிரில்.

**கரூர்**
14ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஆர்த்தி ஹோட்டல்
திண்ணப்பா தியேட்டர் & பஸ்நிலையம் அருகில்.

**புதுவை**
16ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஸ்ரீ சப்தகிரி
பஸ் நிலையம் எதிரில்.

**தென்காசி**
18ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம்
2, பழைய பஸ் நிலையம் ரோடு.

**கிருஷ்ணகிரி**
20ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ்
239, பெங்களூர் ரோடு.

**ஆரணி**
21ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ சாய் சுவாமி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

**ராம்நாடு**
24ம் தேதி
காலை 6 முதல் மாலை 5வரை
ஹாஜா பேலஸ்
துரைராஜ் சத்திரம் வீதி.

**சிவகாசி**
25ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
மணீஸ் லாட்ஜ்
பஸ் நிலையம் பின்புறம்.

**பொள்ளாச்சி**
27ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
சக்தி ஹோட்டல்
144, கோவை ரோடு.

**மேட்டுப்பாளையம்**
28ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் காவேரி
K.G.C.காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு.

சிவராஜ் சித்த மருந்துகளை www.sivarajsiddha.com ஆன்லைன் மூலம் மருந்து பெறலாம்.  G Pay Paytm 98427 22500



7 தலைமுறைகள், 212 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட நிறுவனம்.

Advt

# மாவலி பதில்கள்

ஆர். ஹரிகோபி, புதுடெல்லி

**ராகுல்காந்தியின் அறிக்கைகளும், அவர் எழுப்பும் கேள்விகளும் அதிக முக்கியத்துவம் பெறாமல் போவது ஏன்?**

ஊடகங்கள் ஆளும் கட்சியின் செய்தி, அறிக்கைகளுக்கே அதிக முக்கியத்துவம் தருவதால்தான். தவிரவும், கடந்த பத்தாண்டுகளில் செய்திகளைக் கொண்டுசேர்க்க சமூக ஊடகங்களில் பெருமளவில் முதலீடு செய்யும் கட்சியே பெரிய அளவில் தாக்குப்பிடிக்க முடியும் என்ற நிலை இந்தியாவில் உருவாகியிருக்கிறது. அதற்கேற்ப காங்கிரஸ் தகவமைத்துக்கொள்ளாததும் ஒரு காரணம்தான்.

மு.முஹம்மது ரபீக் ரஷாதீ, விழுப்புரம்

**கமலை மன்னிப்பு கேட்கவைப்பது உயர் நீதிமன்றத்தின் வேலை அல்ல என்று கூறியுள்ளதே உச்சநீதி மன்றம்...?**

எல்லாம் சரிதான். இப்போது தீர்ப்பு வந்து என்ன செய்ய? இனி கர்நாடகத்தில் மட்டும் படத்தை வெளியிட்டு கமல் அள்ளிக் கட்டிவிடப் போகிறாரா என்ன?

நடேஷ்கன்னா, கல்லிடைக்குறிச்சி.

**தி.மு.க. கூட்டணிக்கு பா.ம.க. வந்தால் நாங்கள் வெளியேறுவோம் என திருமாவளவன் பகிரங்கமாக அறிவித்திருக்கிறாரே?**

அவரவர்க்கு ஒரு கொள்கை நிலைப்பாடு இருக்கும். அதன்படி தன் நிலைப்பாட்டை அறிவிக்க திருமாவளவனுக்கு உரிமையிருக்கிறது. பா.ஜ.க.வின் அன்புப்பிடியில் இருக்கும் அன்புமணி தற்போதைக்கு அங்கிருந்து இந்தப் பக்கம் தாவ வழியில்லை. கட்சியில் கலகத்தைக் கிளப்பும் ராமதாஸும் அணியை உடைத்துக்கொண்டு தி.மு.க. பக்கம் வந்துசேர்வதுபோல் தெரியவில்லை. அதனால் தி.மு.க.வோ வி.சி.கவோ கவலைப்படத் தேவையில்லை.

மல்லிகா அன்பழகன், சென்னை

**யோகா தினம் கொண்டாடினீர்களா?**

யோகா செய்வதாக இருந்தால் தினசரி வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டும். அப்போதுதான் அதன் பலன் நமக்குக் கிடைக்கும். யோகா தினத்தன்று மட்டும் யோகா செய்வதற்கு நாமென்ன பிரதமரா? அல்லது பொங்கல், தீபாவளி போன்று கொண்டாட்டத்துக்கான பண்டிகையா யோகா தினம்?

தே.மாதவராஜ், கோயம்புத்தூர்

**கள்ளுக்கடைகளைத் திறந்தால் என்ன?**

திறக்கலாம். அண்டை மாநிலங்களில் எல்லாம் திறந்துதான் இருக்கிறது. ஒரேயொரு பிரச்சனை வரும், கள்ளில் சிலர் போதைக்காக மாத்திரைகளைக் கலந்து, குடிப்பவர்கள் சிலருக்கு ஒத்துக்கொள்ளாமல் போகலாம். சிலர் கள்ளுக்கடை என்ற பெயரில், ரகசியமாக கள்ளச்சாராயமும் விற்கலாம். அந்தத் தலைவலி எதற்கு என்று மாநில அரசு நினைக்கிறது. மற்றபடி கள்ளுக்கடை திறப்பதால் அரசுக்கு பெரிய இழப்பு வந்துவிடாது.

ரா.ராஜ்மோகன், முட்டியூர்

**எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் எடப்பாடி பழனிச்சாமியின் செல்வாக்கு முதல்வர் ஸ்டாலின் செல்வாக்கைவிட பல மடங்கு உயர்ந்துள்ளது என்கிறாரே முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார்?**

செல்வாக்கை அளப்பதற்குத்தான் தேர்தல் இருக்கிறது. ஆளாளுக்கு செல்வாக்கைத் தீர்மானிப்பதைவிட, பொதுமக்கள் மனப்போக்கை வைத்து செல்வாக்கைத் தீர்மானித்துக்கொள்ளலாம்.

எஸ். அர்ஷத் ஃபயாஸ், குடியாத்தம்

**விராட், ரோஹித், அஸ்வின் இல்லாத இந்திய அணி இங்கிலீஷ் மண்ணில் சாதிக்குமா..?**

அதற்கென்ன செய்ய... இன்றைய இந்திய அணியில் கவாஸ்கர் இல்லை, கபில்தேவ் இல்லை,

எல்லோர் வாழ்விலும் நாம் மரத்தடி வேராக இருக்க முடியாது -சிலர் வாழ்வில் உதிரும் இலையாகவும், வெட்டப்படும் கிளையாகவும் இருந்துதான் ஆகவேண்டும்... அதுதான் எதார்த்தம்!

அனில் கும்ப்ளே இல்லை, சச்சின் இல்லை, டிராவிட் இல்லை, கங்குலி இல்லை... ஷேவாக் இல்லை... எத்தனையோ ஜாம்பவான்கள் இல்லை. அப்போதும் சாதிக்கத் தானே செய்தது. இந்த மூன்று பேர் இல்லாமலும் இந்திய அணி சாதிக்கும்.

த.சத்தியநாராயணன், அயன்புரம்

**உலகில் கவலையில்லாத பிரதமர் யார்?**

பிரதமர் பதவியிலிருந்துகொண்டு கவலையில்லாமலிருக்க முடியாது. ரயில் கவிழ்ந்தாலும், விலை உயர்ந்தாலும், அண்டை நாடு வம்புக் கிழுத்தாலும், பூமி அதிர்ந்தாலும், சொந்த நாட்டின் கரன்சி மதிப்பு தேய்ந்தாலும் பதில் சொல்லியாக வேண்டும். கற்பனையில் மட்டும்தான் கவலையில்லாத பிரதமர் இருக்கமுடியும்.

எஸ்.இளையவன், சென்னை

**டாடா நிறுவனம் ஏர் இந்தியா விமானங்களை வாங்கும்பொழுது சோதனை செய்யாமலா வாங்கி யிருப்பார்கள்?**

விமான நிறுவனங்கள் பயன்படுத்தும் அனைத்து விமானங்களுமே அதற்குச் சொந்தமானவை இல்லை. பெரும்பகுதி விமானங் களை இதற்கென வாட கைக்குவிடும் நிறுவனங்களி டம் வாடகைக்கு எடுத்துத்தான் ஓட்டும். 2022-ல் இந்திய அரசிட மிருந்து டாடாவால் ஏர் இந்தியா வாங்கப்பட்டது. அதன்பின் அடுத்த ஆண்டு அந்த விமானம் பராமரிப்புப் பணிகளுக்கு உட்படுத்தப்பட்டது. விபத் துக்குள்ளான விமானத்தின் இரு எஞ்ஜின் களில் ஒன்று சமீபத்தில் புதிதாக மாற் றப்பட்டது. மாற்றப்படாத எஞ்ஜினும் நன்றாகவே இருந்தது என்பது டாடாவின் தகவல்.





சௌமியா

கதறும் சௌமியா தாய்





# தண்ணீர் லாரி விபத்து! மாணவி மரணம்!

## –கமிஷனர் அருண் அதிரடி!

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் தண்ணீர் லாரிகள் விபத்துகளை ஏற்படுத்திவருவது வாடிக்கையாகி வருகிறது. கடந்த ஜூன் 18ஆம் தேதி சௌமியா என்ற பத்து வயதுச் சிறுமி தண்ணீர் லாரி விபத்தில் உடல் நசுங்கி உயிரிழந்தது அப்பகுதி மக்களை அதிரவைத்திருக்கிறது.

சென்னை கொளத்தூர் பொன்னியம்மன் மேடு, சாய்ராம் சாலை மூன்றாவது தெருவைச் சேர்ந்த யாமினி- செந்தில் தம்பதியின் குழந்தை சௌமியா. சௌமியா புரசைவாக்கம் பகுதியிலுள்ள தனியார் பள்ளியில் படித்துவருகிறார். சௌமியாவை அவரின் அம்மா யாமினி தினமும் பள்ளியில் விட்டுவிட்டு பின்பு அழைத்துவருவது வழக்கம்.

இந்த நிலையில் கடந்த ஜூன் 18-ஆம் தேதி காலை சௌமியாவை பைக்கின் சீட் பின்புறத்தில் அமர வைத்துக்கொண்டு யாமினி வண்டியை ஓட்டிச்சென்றுள்ளார். சாலையிலிருந்த பள்ளத்தில் அவருடைய பைக் இறங்கியேறியபோது தடுமாறிச் சாய்ந்துள்ளது. இதில் யாமினி இடதுபுறம் சரிந்து விழ, பைக் பின்சீட்டில் அமர்ந்திருந்த குழந்தை சௌமியா வலதுபுற

www.nakkheeran.in



விபத்து ஏற்படுத்திய லாரி



ஆணையர் அருண்

சாலையில் விழுந்துள்ளார். பின்புறத்தில் வேகமாக வந்த தண்ணீர் டேங்கர் லாரியின் பின்புற டயரில் சிக்கினார். குழந்தை சௌமியாமீது லாரி டயர், ஏறி இறங்கியதில் உடல் நசுங்கி சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.

தன் கண்முன்னே குழந்தை நசுங்கி இறந்தது கண்டு மயக்கமடைந்த தாய் யாமினியை செம்பியம் காவல் நிலைய ஆய்வாளர் சிரஞ்சீவி தண்ணீர் தெளித்து முதலுதவி செய்து, போக்குவரத்து ஆய்வாளர் சுடலைமணிக்கு தகவல் கொடுத்தார்.

போக்குவரத்து காவல் போலீசார் தண்ணீர் லாரியை ஓட்டிவந்த ஓட்டுநர் கார்த்திகேயனைக் கைதுசெய்து வழக்குப் பதிவுசெய்தனர். இந்த விபத்து குறித்த தகவல் சென்னை மாநகர காவல் ஆணையர் அருணுக்கு தெரிய, தீவிரமாக விசாரித்து ரிப்போர்ட் அளிக்கக் கூறியிருந்தார். விபத்து நடந்த நேரத்தில் போக்குவரத்து போலீசார் அந்தப் பகுதியில் பணியில் இல்லை என்பதை அறிந்தவுடன் செம்பியம் போக்குவரத்துக் காவல் ஆய்வாளர் சுடலைமணியை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டார். மேலும் புளியந்தோப்பு உதவி ஆணையர் சத்தியமூர்த்திமீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார். சென்னை மாநகர காவல் ஆணையர் அருணின் இந்த அதிரடி நடவடிக்கை தமிழக போக்குவரத்து காவல் துறையினர் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**அனுபவம் இல்லாத அறிவு பயனற்றுப்போகும்!**

பணிநேரத்தில் பணிகளைச் செய்யாத போலீசார்மீது அதிரடி காட்டிவரும் சென்னை மாநகர காவல் ஆணையர் அருணின் நடவடிக்கை பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பள்ளி, கல்லூரி நேரங்களில் அதாவது காலை 7 மணி முதல் 12 மணி வரை மற்றும் மாலை 4 முதல் 8 மணி வரை தண்ணீர் லாரி மற்றும் கனரக வாகனங்களை இயக்க அனுமதி மறுத்து அதற்கு தடைவிதித்துள்ளார் கமிஷனர் அருண். கவனக்குறைவாக விபத்தை ஏற்படுத்தும் வாகனங்களை 100 நாட்கள் வரை விடுவிக்கக்கூடாது என்று போக்குவரத்து, புலனாய்வு காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு துரைப்பாக்கம் பல்லாவரம் ரேடியல் சாலையில் ஐ.டி. பெண் ஊழியர் சுபஸ்ரீ அ.தி.மு.க. கட்சி பேனர் விழுந்து நிலைதடுமாறியதில் தண்ணீர் லாரியில் நசுங்கி உயிரிழந்தார். கடந்த ஆறு மாதத்தில் மட்டும் சென்னை மாநகர காவல் எல்லைக்குள் சிறுமி சௌமியா உட்பட இருவர் பலியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னை மாநகர காவல் எல்லைக்குள் மக்கள் அதிகமாக நடமாடும் பீக் அவர்ஸ் நேரத்தில் கனரக வாகனங்கள் வரக்கூடாது என்று உத்தரவுகள் இருந்தாலும் சிலர் போக்குவரத்து காவல்துறையினருக்கு சன்மானங்களைக் கொடுத்துவிட்டு வருவது வழக்கமாக இருந்துவருகிறது. கமிஷனரின் உத்தரவால் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா?

**-அரவிந்த்**

படங்கள்: ஸ்டாலின்

# டாக்டர் அய்யாவை ஆட்டிப்படைக்கும் ‘தீய

**பா**.ம.க. நிறுவனத் தலைவர் மருத்துவர் ராமதாசுக்கும், கட்சித் தலைவர் அன்புமணிக்கும் இடையே மூண்டுள்ள அதிகாரச் சண்டைதான், தமிழக அரசியல் களத்தில் இப்போதைக்கு ஈரான் -இஸ்ரேல் போரைவிட பயங்கர உஷ்ணத்தைக் கூட்டியிருக்கிறது.

எனினும், பெரும்பாலான கட்சி நிர்வாகிகள் அன்புமணிக்கு ஆதரவாக இருக்கிறார்கள். இந்த உத்வேகத்தில் அவர், மாவட்டந்தோறும் பொதுக்குழுக் கூட்டத்தை நடத்தத் தொடங்கி விட்டார். இந்நிலையில், சேலம் இரும்பாலை அருகே ஒரு தனியார் மண்டபத்தில், ஜூன் 19-ல், ஒருங்கிணைந்த பா.ம.க. மாவட்ட பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார் அன்புமணி.

மேற்கு மா.செ. சதாசிவம் எம்.எல்.ஏ., வன்னியர் சங்க மாநில செயலாளரும் மாஜி எம்.எல்.ஏ.வுமான மு.கார்த்தி ஆகியோர் தலைமையில், நிர்வாகிகள் அன்புமணியை வரவேற்று பேனர்கள், கட்சிக் கொடிகள் அமைத்து தடபுடலான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

கூட்டம் நடைபெறும் இடத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள், கலசம் எடுத்து வந்து வரவேற்பு அளித்ததைப் பார்த்து உற்சாகமடைந்தார் அன்புமணி. சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் பொதுக்குழு நடக்கிறது என்பதையறிந்த, அந்த தொகுதியின் சிட்டிங் பா.ம.க. எம்.எல்.ஏ. அருள், அதற்கு முதல் நாளே நெஞ்சுவலி எனக்கூறி, சென்னையிலுள்ள அரசு மருத்துவமனையில் சென்று படுத்துக்கொண்டார். சேலத்தைத் தொடர்ந்து, அன்று மாலை தர்மபுரியிலும் பொதுக்குழுக் கூட்டம் நடத்தவிருந்ததால், பென்னாகரம் எம்.எல்.ஏ. ஜி.கே.மணியும் உடல்நலம் சரியில்லை என்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பொதுக்குழுவில் மருத்துவர் அன்புமணி, "நமது கட்சியின் இரண்டு எம்.எல்.ஏ.க்கள் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் விரைவில் உடல்ரீதியாக, ‘மனரீதியாக’ பூரண குணமடைய நாம் எல்லோரும் கூட்டுப் பிரார்த்தனை செய்வோம்," என்று சம்பவம் செய்தார். இதைக் கேட்டு, கூட்டத்தில் பலத்த சிரிப்பலை.

அவர் பேசுகையில், "சேலம் மாவட்டம் பா.ம.க.வின் கோட்டை. என் மீது பல குற்றச் சாட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. அனைத்துக்




சேலம் கூட்டத்தில்...

சக்தி!'



## -அன்புமணி ராமதாஸ்!

குற்றச்சாட்டுகளும் 100 சதவீதம் பொய்யானவை. இன்னும் சில நாள்களில் இதை நான் தெளிவுபடுத்துவேன்'' என்ற அன்புமணி, தி.மு.க. பக்கம் பேச்சைத் திருப்பினார்.

"சமீபத்தில் இந்த நாடே திரும்பிப்பார்க்கும் வகையில் நாம் ஒரு மாநாட்டை நடத்தினோம். இந்த மாநாட்டைப் பார்த்து தி.மு.க.வுக்கு பயம் வந்துவிட்டது. வரும் சட்டமன்றத் தேர்தலில், வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நிச்சயமாக தி.மு.க.வுக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்ற பயம் தி.மு.க.வுக்கு வந்துவிட்டது.

சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த தமிழக அரசுக்கே அதிகாரம் இருக்கிறது. ஆனால் மத்திய அரசுதான் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று திரும்பவும் பொய் சொல்கிறார் முதல்வர். வரும் தேர்தலில் ஊழல் மற்றும் கொடுங்கோல் ஆட்சியான தி.மு.க. ஆட்சியை அகற்றுவோம்" என்றார்.

கட்சி நிர்வாகிகள் பேசுகையில், வரும் தேர்தலில் அன்புமணி ராமதாஸ், சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். அவர் சேலத்தில் போட்டியிடவும் வாய்ப்பிருக்கிறது என்கிறார்கள் கட்சியினர்.

பா.ம.க. மூத்த நிர்வாகிகளிடம் பேசிய போது, ''கட்சிக்குள் நடந்துகொண்டிருக்கும் பிரச்னைகள், கட்சியின் எதிர்காலம் குறித்து அன்புமணி பேசினார். திடீரென்று அவர், மருத்துவர் அய்யாவை ஒரு தீய சக்தி ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. அந்த தீய சக்தி சொல்வதைத்தான் அய்யா கேட்கிறார். கஷ்டப்பட்டு வளர்த்த இந்த இயக்கத்தை அந்த தீய சக்தி அழிக்கத் துடிக்குது. இதை சும்மா விடக்கூடாது என்றார்.

அந்த தீய சக்தி யார்? என்று எங்களிடம் அன்புமணி வெளிப்படையாகக் கூற வில்லை. ஆனால், ஒவ்வொரு மாவட்ட நிர்வாகிகளிடமும் அன்புமணி இந்த தகவலைச் சொல்லிவருகிறார். நிச்சயமாக அந்த தீய சக்தி, எங்கள் கட்சியிலோ, பிற கட்சிகளிலோ இல்லை'' என்கிறார்கள்.

இன்னும் சிலரோ, "மருத்துவர் அய்யா முதலில் 2026 தேர்தல் வரைக்கும் தலைவராக இருப்பேன் என்று கூறினார். அப்போது யாரிடமிருந்தோ அவருக்கு ஒரு போன் வந்தது. அதற்குப் பிறகு, இறுதி மூச்சு உள்ள வரை தலைவராக இருப்பேன் என்று மருத்துவர் அய்யா சொன்னார். ஒருவேளை, போனில் பேசிய அந்த நபர்கூட தீய சக்தியாக இருக்கலாம்'' என ட்விஸ்ட்டுடன் முடித்தனர்.

தந்தை, மகனுக்குமான அதிகாரச் சண்டையில் மாம்பழத்துக்கு டேமேஜ் வந்துவிடக்கூடாது என்பதே பா.ம.க. தொண்டர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

**-இளையராஜா**

### குழப்பத்தில் தொண்டர்கள்!

கடலூரில் ஒருங்கிணைந்த மாவட்ட பொதுக்குழு கூட்டம் அன்புமணி தலைமையில் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. ஜூலை மாதம் நடைபயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் மாவட்டம்தோறும் பொதுக்குழு கூட்டத்தை கூட்டி கட்சியில் தனக்கான செல்வாக்கை தந்தைக்கு நிரூபிக்கும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுவருகிறார். கடலூர் மாவட்டச் செயலாளர்களை நீக்கிவிட்டு, ராமதாஸ் புதிய செயலாளர்களை நியமித்துள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பழைய மாவட்டச் செயலாளர்களே தொடர்வார்கள் என்று அன்புமணி அறிவித்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இரு அதிகார மையம் இருப்பதால், தந்தை நீக்குவதும் மகன் தொடர்வார் என அறிவிப்பதும் தொண்டர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. **-காளிதாஸ்**

பலியான சிறுமி



# சிறுத்தையிடம் பலியான சிறுமி! வால்பாறை கொடூரம்!



**வா**ல்பாறையில் தாயின் கண்முன்னே விளையாடிக்கொண்டிருந்த 7 வயது சிறுமி சிறுத்தையால் இழுத்துச் செல்லப்பட்டு, மறுநாள், உடல் துண்டுதுண்டான நிலையில் சடலமாக மீட்கப்பட்டது பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சிறு குழந்தைகள், சிறுத்தை உள்ளிட்ட விலங்குகளால் தொடர்ச்சியாகக் கொல்லப்படுவதற்கு மக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லாமையே காரணமாகிறது என்ற திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

கோவை வால்பாறையில், அரசு மற்றும் தனியாருக்குச் சொந்தமான தேயிலை எஸ்டேட்கள் 54க்கும் அதிகமாக உள்ளன. தலைமுறை தலைமுறையாக அங்கே வேலைபார்க்கும் தொழிலாளர்கள் தவிர, பீகார், ஒரிஸ்ஸா உள்ளிட்ட வட மாநிலத் தொழிலாளர்கள் மட்டும் சுமார் 35,000க்கும் மேற்பட்டோர் தேயிலை பறிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில், பச்சைமலை எஸ்டேட் பகுதியிலுள்ள காளியம்மன் கோவில் முன்புள்ள லைன் குடியிருப்பில் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த மனோஜ் முண்டா, மோனிகா தேவி தம்பதியினர் தங்களது இரு பெண் குழந்தைகளுடன் வசித்து வருகின்றனர். கடந்த வெள்ளிக் கிழமையன்று மாலை 5.30 மணியளவில் தொழிலாளர்களின் குழந்தைகள் காளியம்மன் கோவில் லைன் குடியிருப்பின்முன் விளையாடிக்கொண்டிருக்க, அங்குள்ள பெண்கள் அருகிலிருந்த தண்ணீர்க் குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தனர்.



கணேஷ் ரகுநாதன்

"கொஞ்சம் இருட்டியிருந்தது. மழை தூறிக்கொண்டிருந்தது. அவரவர் வீட்டிற்குத் தேவையான தண்ணீரைப் பிடிக்க இங்க நிக்கையில் எங்கிருந்தோ வந்த சிறுத்தை ஒன்று மோனிகா தேவி மக ரோஸ்லி குமாரியை இழுத்துட்டுப் போயிருச்சு. அம்மா கண் முன்னே குழந்தையை சிறுத்தை இழுத்துட்டுப் போன நிலையில், சத்தம் போட்டு அத்தனை பேரையும் கூப்பிட்டுத் தேடிப் பார்த்தோம். அதன்பின்னர் எஸ்டேட்டில் தகவலைக்கூறி குழந்தை ரோஸ்லி குமாரியை எஸ்டேட்காரர்கள், வனத்துறையினர் மற்றும் காவல்துறையினர் உதவியுடன் தேடிப் பார்த்தோம். சிறிது தூரத்தில் ரோஸ்லி குமாரி அணிந்திருந்த ஆடை மட்டும் ரத்தக் கறையுடன் தேயிலைத் தோட்டப் பகுதியில் கிடந்தது. ஆனால் சிறுமியின் உடல் கிடைக்கவில்லை. இரவு சுமார் 9.30 மணி வரை தேடியும் இருட்டும், மழையும் அதிகமாயிட்டதால் வேறு வழியில்லாமல் வீட்டிற்கு திரும்ப வேண்டியதாச்சு. அவங்களுக்கு எப்படி ஆறுதல் சொல்றதுன்னு தெரியல." என்கின்றார் அவர்களின் உறவினர்.

சனிக்கிழமையன்று அதிகாலையி

**(தொடர்ச்சி 33-ம் பக்கம்)**

www.nakkheeran.in


உண்மையின் குரல் உங்கள் கைகளில்!
அனைத்துத் துறை தகவல்களையும் அதன்
உண்மைத்தன்மை மாறாமல் உடனுக்குடன் வழங்கும்
நக்கீரன் இணையம் - Youtube சேனல்கள்!
நக்கீரன்
nakkheeran.in
NAKKHEERAN 360
நக்கீரன் நலம்
நக்கீரன் களம்
நக்கீரன் TV
NAKKHEERAN STUDIO
நக்கீரன் குழும வெளியீடுகளை
ஆன்லைனில் ஆர்டர் செய்ய
QR Code Scan செய்யுங்கள்..!
தொடர்புக்கு
044-26881800
044-26881700
www.nakkheeran.in
Advt

# ரீல் டாக்கீஸ்

## நடிகைக்கு மவுசு!

கன்னட நடிகை ருக்மணி வசந்த், 'சப்த சாகர தாச்சே எல்லோ' என்ற படம் மூலம் கவனிக்கப்பட்டார். பின்னர் தமிழில் விஜய் சேதுபதியின் 'ஏஸ்' படத்தில் நடித்தார். அடுத்து ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'மதராஸி' படத்திலும் நாயகியாக நடித்துவருகிறார். தெலுங்கிலும் நடித்துவரும் இவர், இப்போது பிரசாந்த் நீல் இயக்கத்தில் ஜூனியர் என்.டி.ஆர் நடிக்கும் படத்தில் நாயகியாக நடிக்கிறார். பிரம்மாண்ட ஆக்ஷன் படமான இதில் ஹீரோயினுக்கும் முக்கியத்துவம் உள்ளதால், சிறந்த நடிப்பை வெளிப்படுத்துவார் என்பதற்காகவே ருக்மணி வசந்தை தேர்வு செய்ததாக கூறியுள்ளது படக்குழு.

## மகிழ்ச்சியில் அனஸ்வரா!

மோலிவுட்டில் வளர்ந்து வரும் நடிகையாக இருக்கும் அனஸ்வரா ராஜன், கோலிவுட்டில் த்ரிஷா நடித்த ராங்கி படம் மூலம் எண்ட்ரி கொடுத்தார். அப்படம் அவருக்கு சரியான பாதையை அமைத்து தரவில்லை. பின்பு டான்ஸ் மாஸ்டர் பிருந்தா இயக்கிய தக்ஸ் படத்தில் நடித்தார். அதுவும் எதிர்பார்த்த வெற்றியடையவில்லை. இதனால் அவருக்கு தமிழில் வாய்ப்பு வராமல் போக மோலிவுட்டிலேயே தொடர்ச்சியாக நடித்து வந்தார். இப்போது அவருக்கு தமிழில் வாய்ப்புகள் கிடைத்து வருகிறது. செல்வராகவன் இயக்கும் 7ஜி ரெயின்போ காலனி, ஹரிஷ் கல்யாண் -அந்தகாரம் பட இயக்குநர் விக்னராஜன் கூட்டணியில் ஒரு படம் என தமிழில் நடிக்க வாய்ப்புகள் கிடைத்ததால் ரொம்பவே மகிழ்ச்சியில் இருக்கிறார் அனஸ்வரா.

## முன்னணி கூட்டணி!

அஜித் -ஆதிக் ரவிச்சந்திரன் இணையும் அடுத்த பட வேலைகள் நடந்து வருகிறது. நவம்பரில் படப்பிடிப்பு தொடங்க திட்டமிட்டுள்ளனர். படத்திற்கு ஏ.கே.64 என தற்காலிகமாக பெயரை வைத்து ஆரம்பகட்ட வேலைகள் நடந்துவருகிறது. நாயகியாக கே.ஜி.எஃப். படத்தில் நடித்த ஸ்ரீநிதி ஷெட்டியிடம் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இப்படத்தை வேல்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. அதாவது அஜித்தின் முந்தைய படமான குட் பேட் அக்லி படத்தை விட 15க்கும் அதிகமான கோடிகளை தயாரிப்பு நிறுவனம் அஜித்துக்கு கொடுத்துள்ளது. இதனால் பெரிய ஸ்டார்கள் படத்தின் உள்ளே வருவார்கள் என பேச்சுகள் அடிப்பட்ட நிலையில், மலையாள முன்னணி நடிகர் மோகன்லாலை, ஆதிக் ரவிச்சந்திரன் சந்தித்து படம் தொடர்பாக பேசியுள்ளார்.

## மாஸ் மசாலா!

சமீபகாலமாக விக்ரம் படங்கள் தோல்வியையே சந்தித்து வருகிறது. இதனால் முதலில் தன் ரசிகர்களுக்கு தீனி போட்டு பின்பு தனது நடிப்புக்கு தீனி போட்டுக்கொள்ளலாம் என முடிவெடுத்துள்ளாராம் விக்ரம். அந்த வகையில் 'வீர தீர சூரன்' படத்தை பெரிதும் நம்பியிருந்தார்.



ருக்மணி வசந்த்

ஆனால் படம் பாதிதான் அதை நிறைவேற்றியது. இதனால் ஒரு அதிரடி முடிவெடுத்துள்ளார். அதாவது தனது நடிப்புக்கு தீனி போடும் வகையில் வீர தீர சூரன் படம் வெளியாவதற்கு முன்னரே அவர் கமிட் செய்திருந்த அவரது 63வது படத்தை கேன்சல் செய்திருந்தார். இப்படத்தை 'மண்டேலா', 'மாவீரன்' பட டைரக்டர் மடோன் அஸ்வின் இயக்கவிருந்தார். தற்போது அந்தப் படம் மீண்டும் தொடங்கப்பட விருக்கிறது. இந்தப் படம் தனது ரசிகர்களை திருப்திபடுத்தும் என நம்புகிறாராம் விக்ரம்.

## ஆறுதல் அனுபமா!

நடிகை அனுபமா பரமேஸ்வரன், தனது கரியரை தாய் மொழி மலையாளத்தில் தொடங்கினாலும் தொடர்ச்சியாக அங்கு அவர் நடிக்கவில்லை. இப்போது நீண்ட இடைவெளிக்குப் பிறகு 'ஜானகி vs ஸ்டேட் ஆஃப் கேரளா' என்ற மலையாள படத்தில் நடித்துள்ளார். வருகின்ற 27ஆம் தேதி படம் வெளியாகவுள்ள நிலையில் சமீபத்தில் பட நிகழ்வு ஒன்றில் பேசிய அனுபமா, 'என்னை இங்கு பலர் ஓரங்கட்டினார்கள். எனக்கு நடிக்கத் தெரியாது என்று ட்ரோல் செய்தார்கள்' என மனம் வெதும்பினார். இது அவரது ரசிகர்கள் மத்தியில் சங்கடத்தை ஏற்படுத்த.. அவர்கள் அனுபமாவுக்கு ஆறுதல் கூறி ஆதரவு கொடுத்துள்ளனர். இதனால், இனிமேல் தனக்கு மலையாள பட வாய்ப்புகள் அதிகம் கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்போடு இருக்கிறாராம் அனுபமா.

**-கவிதாசன் ஜெ.**



சிவகங்கை சீமைக்கு வருகை தந்து மாணக்கர்களிடம் அக்கறையையும், பயனாளிகளிடம் பரிவையும், கழக முன்னோடியிடம் மரியாதையும் செலுத்தி பொதுமக்கள், கட்சிக்காரர்கள் என அனைவரையும் அசத்தியுள்ளார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்.

செவ்வாய்க்கிழமையன்று (17-6-2025) காலை 10.15 மணியளவில், சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறவிருக்கின்ற அரசுத்துறை ஆய்வுகள் மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மதுரையிலிருந்து புறப்பட்டு திருப்புவனம் வந்தடைந்தார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். எழுச்சிமிகு உற்சாக வரவேற்பை கட்சியினர் கொடுத்திருந்தாலும், அங்கு கூடியிருந்த மாணவிகள் ரோசாப்பூக்களையும், கேட்பரீஸ் சாக்லேட்களையும் கொடுத்து 'அண்ணனை' வரவேற்றதில் திக்குமுக்காடிப் போனார் துணை முதல்வர். அடுத்ததாக, தடுப்பணை ஆய்வு. சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே வைகை ஆற்றின் குறுக்கே ரூ.40.27 கோடி மதிப்பில் நடைபெற்றுவரும் தடுப்பணை பணியை பார்வையிட்டார். நீர்வளத்துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் ஆகியோரிடம், "7 ஆயிரம் ஏக்கர் பாசனப்பரப்பு பயன்பெறக்கூடிய இந்தத் திட்டத்தை உரிய காலத்திற்குள், தரமாகக் கட்டிமுடிப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்" என அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, சிவகங்கை நகர்மன்ற தலைவர், மாவட்டக் கழக அவைத்தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புக்களில் திறம்பட செயல்பட்டவரான கழக முன்னோடியான சோழபுரத்திலுள்ள சாத்தையாவின் இல்லத்திற்கு சென்று அவருக்கு மரியாதை செலுத்தினார். துணை முதல்வர், "தலைவர் கலைஞர், தமிழ்நாட்டின் எந்த ஊருக்கு சென்றாலும் அந்த ஊரின் கழக முன்னோடிகளை உரிமையோடு பெயர் சொல்லி அழைப்பார். அச்சமயத்தில் கழக உடன் பிறப்புக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைவர். அப்படிப்பட்ட கழக முன்னோடிகளை இல்லம் தேடிச்சென்று மரியாதை செய்வதை என்றும் மறக்கமாட்டோம்." என துணைமுதல்வரை பாராட்டுகின்றனர் சிவகங்கை மாவட்டத்திலுள்ள கழகத்தின் முன்னோடிகள்.



மாணவர்களுடன் உணவருந்திய துணைமுதல்வர்

தொடர்ந்து சிவகங்கை மாவட்ட ஆட்சியரகத்தில் அதிகாரிகளுடனான ஆய்வுக் கூட்டம். அதனைத் தொடர்ந்து ரூ.33.23 கோடி மதிப்பில் நிறைவுற்ற 36 திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்து ரூ.4.58 கோடி மதிப்பிலான 5 பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய துணை முதல்வர், 1,512 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் ஒரு பயனாளி கையில் கட்டுடன் வந்து உதவியைப் பெறும்பொழுது, அவரிடம் அதுகுறித்து துணை முதல்வர், "என்னம்மா? கையில் அடிபட்டிருக்கு? என்ன நடந்தது?" என வாஞ்சையாகக் கேட்க, "இல்லப்பா, பஸ்ஸுக்காக காத்திருக்கும்போது அங்கு வந்த பஸ்ஸின் முகப்பில் கவனக்குறைவாக இடித்துவிட்டது. இப்ப பரவாயில்லைப்பா" என வெள்ளந்தியாக பதில் கூற அந்த இடமே நெகிழ்ச்சியானது.

மன்னர் துரைசிங்கம் கல்லூரி அருகிலுள்ள சிவகங்கை மாவட்ட விளையாட்டு விடுதியில் திடீரென ஆய்வுசெய்த துணை முதல்வர், தங்குமிடம், கழிவறை மற்றும் குளியலறைகளை ஆய்வுசெய்து சில குறைகளை சுட்டிக்காட்டி உடனே சரி செய்ய வேண்டுமென உத்தரவிட்டவர், அங்கேயே மாணாக்கர்களுடன் உட்கார்ந்து மதிய உணவு சாப்பிடுவதாக உடனிருந்தவர்களி

**கல்வியை புத்திசாலித்தனத்துடன் ஒருபோதும் குழப்பிக்க வேண்டாம் -நீங்கள் பி.எச்.டி. படித்த பின்னும் கூட முட்டாள்களாக இருக்கலாம்!**



சாத்தையாவின் இல்லத்தில் சந்திப்பு

# பரிவு, மரியாதை, அக்கறை!

## -சிவகங்கையில் அசத்திய துணை முதல்வர்!

டம் தெரிவித்தார். உடனிருந்தவர்கள் மறுத்துப் பேச இயலாத நிலை. அங்குள்ள மாணாக்கர்களுடன் இணைந்து சாப்பாட்டுத் தட்டை எடுத்து அங்கேயே அமர்ந்து உணவருந்தினார் துணை முதல்வர். அப்படியே அவர்களோடு சிரித்து மகிழ்ந்தவர், அவர்களின் குறைகளைக் கேட்கத் தவறவில்லை.

அடுத்ததாக திருப்புத்தூரில் தி.மு.க.வின் 25 சார்பு அணிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தில் கலந்துகொண்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், "தி.மு.க.வில் 25 அணிகள் உள்ளன. ஆனால் அ.தி.மு.க.வின் நிலையோ, அவர்களின் கட்சியே 25 அணிகளாக பிரிந்து கிடக்கிறது. அ.தி.மு.க.விலுள்ள அனைத்து அணிகளையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரே நபர் டெல்லியிலுள்ள அமித்ஷா. அவரின் கட்டுப்பாட்டில்தான் இன்று ஒட்டுமொத்த அ.தி.மு.க.வும் உள்ளது. அமித்ஷாவின் சூழ்ச்சி வலையில் இன்று எடப்பாடி பழனிசாமி சிக்கியுள்ளார். எல்லா வகையிலும் பா.ஜ.க.வுக்கு சவாலாக உள்ளவர் இந்தியாவிலேயே முதல்வர் மு.க.ஸ்டாலின் மட்டும்தான். எந்த ஆதிக்கத்துக்கும் அடங்காத வரலாற்றைக் கொண்டது சிவகங்கை மண் என்பதை நிரூபிக்கும் வகையில், அடிமைகள் - பாசிஸ்டுகளின் கூட்டணியை 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வீழ்த்திட வேண்டும். எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் கழக அணி வெல்ல சிவகங்கை மாவட்டத்திலுள்ள 4 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும். இந்தச் சாதனையைப் படைக்க சார்பு அணி நிர்வாகிகள் அயராது உழைக்க வேண்டும்" என்றார்.

தொடர்ந்து திருப்பத்தூரில் நமக்கு நாமே திட்டம் மூலம் ரூ.7.50 லட்சம் செலவில் செம்மொழிப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்து பெண்களுக்கான மாநில அளவிலான கைப்பந்து போட்டியை தொடங்கி வைத்தார். பின் "மக்கள் முகத்தில் மிளிரும் மகிழ்ச்சியும்- நம்பிக்கையும் தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் திராவிடமாடல் அரசு 2026-லும் தொடரும் என்பதையே காட்டுகிறது" என்று நம்பிக்கையுடன் கூறினார்.

அதன்பின் நிர்வாகிகளை சந்தித்துப் பேசும்போது, அந்த மண்டபத்தில் வயர் ஷார்ட்டாகி மின்சாரம் துண்டிக்கப்படவும்... அப்செட்டான உதயநிதி, நிர்வாகிகள் சந்திப்பை அதோடு ரத்து செய்துவிட்டு, கிளம்பிவிட்டார். துணை முதல்வர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சியில் ஜென்செட் கூட ஏற்பாடு செய்யாதை பலரும் முணுமுணுப்பாய் விமர்சித்தனர்.

**-நாகேந்திரன்**

www.nakkheeran.in

## பண மோசடி!

# சிக்கலில் சீரியல் நடிகை!



ராஜ்கண்ணன்



ரிஹானா பேகத்துக்கு ராஜ்கண்ணன் தாலி கட்டியபோது...





ரிஹானா பேகம்

தமிழகத்தில் பிரபலமான சன், விஜய், ஜீ தொலைக்காட்சிகளில் சீரியல் நடிகையாக நடித்துவருபவர் ரிஹானா பேகம். சில நாட்களுக்கு முன்பு அவர்மீது பூந்தமல்லி காவல் நிலையத்தில் ராஜ்கண்ணன் என்பவர் திருமண மோசடிப் புகார் ஒன்று கொடுத்திருந்தார். அந்த புகாரில், ஏற்கெனவே திருமணம் நடந்து, ரிஹானாவுக்கு விவாகரத்து ஆகாமலே அவரை ஏமாற்றி திருமணம் செய்ததாகவும், 18 லட்சம் பணத்தை ஏமாற்றிவிட்டதாகவும், அதனைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்திருந்தார். இதில் ட்விஸ்ட்டாக, ராஜ்கண்ணன் தான் தன்னிடம் 18 லட்சம் ரூபாயை ஏமாற்றியதாக அவர்மீது ரிஹானா பேகம் ஆவடி கமிஷனர் அலுவலகத்தில் புகாரளித்துள்ளார். இப்படி ஒருவர் மீது ஒருவர் புகாரளித்ததால் சர்ச்சை கிளம்பியுள்ளது.

இந்த பிரச்சனை எப்படி கிளம்பியதென்று பார்த்தால், ராஜ்கண்ணனுக்கும் நடிகை ரிஹானா பேகத்திற்கும் 2023ஆம் ஆண்டு ரிஹானாவின் தோழி மூலமாக பழக்கம்

ஏற்பட்டுள்ளது. ரிஹானா பேகத்தின் தோழியும் கண்ணனும் லிவிங் டுகெதரில் இருந்திருக்கின்றனர். அவர்களிடையே பிரச்சனை எழ, அதை தீர்த்துவைக்கும் வகையில் ரிஹானா பேசியுள்ளார். இதில், ரிஹானா பேகத்துக்கும் கண்ணனுக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் கண்ணன் பிசினஸ் செய்யப்போவதாகவும், ரிஹானாவுக்கு ஆர்வமிருந்தால் பார்ட்னராக இணைந்து செயல்படலாமென்றும் சொல்ல, ரிஹானா அதுகுறித்து விவரம் கேட்டிருக்கிறார். வேளச்சேரியிலுள்ள பீனிக்ஸ் மால் முன்புள்ள கட்டடத்தில் வாடகைக்கு எடுத்து, 'பாய்சன் ரெஸ்டோ பார் லவுஞ்ச்' என்ற பெயரில் தொடங்கவுள்ளதாகவும், விருப்பமிருந்தால் 20 லட்சம் கொடுங்க, மாதம் உங்களுக்கு 5 லட்சம் வருமானமாக வந்துவிடும் எனச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே கணவரை பிரிந்து வாழும் ரிஹானா பேகத்திற்கு, தன் குடும்பத்தை நடத்துவதற்கு இந்த பிசினஸ் வருமானம் உதவியாக இருக்குமென எண்ணி, தன் பங்காக 15 லட்சம் ரூபாய் கொடுத்துள்ளார்.

அதன்பின்னர், கண்ணன் சொன்னபடி ஒரு மாதம்கூட ஒழுங்காக பணம் கொடுக்கவில்லையாம். இதனால் ஆத்திரமடைந்த ரிஹானா கேள்வியெழுப்ப, தொழில் நஷ்டத்தில் செல்வதாகவும், கொஞ்சம் பொறுத்துக்கொள்ளும்படியும் சொன்னதால் வேறு வழியில்லாமல் பணத்திற்காகக் காத்திருந்துள்ளார். இந்த சூழ்நிலையில் கண்ணன் வேறொன்றை திட்டமிட்டு, ரிஹானாவை தொடர்புகொண்டு, "உனக்கு ஒரு எதிர்பாராத ஆச்சர்யம் நிகழப்போகிறது'' எனக்கூறி வர வழைத்துள்ளார். ரிஹானாவும், தனது பணத்தைத் தான் தரப்போகிறாரென்ற எண்ணத்தோடு சென்றுள்ளார். ஆனால் அங்கோ, பணத்தை எதிர்பார்த்த ரிஹானாவுக்கு, அவரை கண்களை மூடச்சொல்லி, திடீரென தாலியைக் கட்டி பேரதிர்ச்சியை கொடுத்துள்ளார் கண்ணன்.

ரிஹானா கணவரைப் பிரிந்துவாழும் சூழலில், அவரை மனைவியாக்கிக்கொண்டால், கொடுத்த பணத்தை அவர் திரும்பக் கேட்கமாட்டார் என்று திட்டமிட்டே இப்படி செய்திருக்கிறாராம். மேலும் தன்னுடைய காரில் அழைத்துச் சென்று பாட்ஷா பட பாணியில் "நான் யாரு என்று தெரியுமா?" என காரில் இருந்த கத்திகளைத் தூக்கிக் காட்டி, "என்னுடைய பெயர் கண்ணன் இல்லை அழகர்சாமி. நான் பெசன்ட் நகரில் பிறந்து வளந்தவன். சிறுவயதிலேயே சிறைக்குச் சென்றவன். பிறகு பல பிரபல ரவுடிகளுடன் கொலைகளைச் செய்துள்ளேன். என்மீது 76 வழக்குகள் உள்ளன. என்னை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் உன் ஆசைக்குழந்தைகள் என்ன ஆவார்கள் என்று எனக்கே தெரியாது'' என மிரட்டவே, வேறுவழியில்லாமல் தன்னுடைய குழந்தைகளுக்காக சில காலம் கண்ணன் சொல்லும்படி வாழ்ந்துள்ளார்.

பிறகு மேலும் சொல்லமுடியாத அளவிற்கு பல பிரச்சனைகளை எதிர்கொண்டதால், உடனே மகளிர் ஆணையத்தில் 2024-ஆம் ஆண்டு புகார் கொடுத்துள்ளார் ரிஹானா. அந்த புகாரை மகளிர் ஆணையம் விசாரித்ததில், கண்ணன் செய்த அனைத்தும் வெட்ட வெளிச்சமானது. அதையடுத்து, இனிமேல் ரிஹானா பேகத்திற்கும் அவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அவரோடு எந்த பிரச்சனையும் செய்ய மாட்டேனென்றும், ரிஹானாவிடம் வாங்கிய பணத்தை நீதிமன்றத்தின் மூலமாகக் கொடுத்துவிடுவதாகவும் எழுத்துமூலமாக எழுதிக்கொடுத்துவிட்டுச் சென்றுள்ளார் கண்ணன்.

இது முடிந்து ஒரு வருடம் கழித்து மீண்டும் தற்போது ஜூன் 15ஆம் தேதியன்று பூந்தமல்லி காவல்நிலைத்தில், 'ரிஹானா பேகம் என்பவர் ஏற்கெனவே திருமணம் நடந்து, அவருக்கு விவாகரத்து ஆகாமலே என்னை ஏமாற்றி திருமணம் செய்துகொண்டதோடு, எனது 18 லட்சம் பணத்தை ஏமாற்றிவிட்டார்' என்று புகார் கொடுத்திருந்தார் கண்ணன். அதன்படி இருவரையும் 18ஆம் தேதி பூந்தமல்லி காவல் நிலையில் விசாரணைக்கு ஆஜராகச்சொல்ல, ரிஹானாபேகம் அன்று ஆஜராகவில்லை. ரிஹானா பேகமோ, 'கண்ணனின் பணத்தை நான் ஏமாற்றவில்லை அவர்தான் என்னை ஏமாற்றினார்' என்று ஆவடி கமிஷனர் அலுவலகத்தில் புகாரளித்துள்ளார். இதனால் இருவரையும் மற்றொரு நாளில் விசாரணைக்கு ஆஜராகும்படி உத்தரவிட்டுள்ளதால், கூடிய விரைவில் விசாரணை செய்யவுள்ளனர். அந்த விசாரணையின் முடிவில் இருவரில் யார் குற்றவாளியென்பது அம்பலமாகக்கூடும். இவர்களது விவகாரம், சீரியலைவிட பெரிய அளவில் ட்விஸ்டோடு போய்க்கொண்டிருக்கிறது!

**-சே**

## (59)

# நாங்கள் கிரிமினல் அல்ல!

சேலம் சிறையில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூடு எல்லா சிறைகளிலும் நடப்பதற்கான வாய்ப்புகள் கூடுதலாகவே இருந்தது. சிறைகள் தோறும் கொந்தளிப்புகள் நிகழ்ந்துகொண்டிருந்தன. இந்தக் கொந்தளிப்பின் தீவிரம், மதுரை சிறையில் அனல்காற்றாக வீசத் தொடங்கியிருந்தது. சிறை என்பது மனிதரை பூட்டி வைக்கும் ஒரு இடம் என்பதாகத்தான் நாம் புரிந்துகொள்கிறோம். ஆனால் அதற்குள் நிகழும் ஒவ்வொன்றும் சமூக வரலாறு என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை. அந்த சமூக வரலாற்றை நேரில் பயின்றவர் தோழர் நல்லகண்ணு.

மதுரை சிறைச்சாலையில் கைதிகளை ஒருங்கிணைத்து அவர்களை ஒரு குறிக்கோளை நோக்கி நகர வைப்பதிலிருந்து, இவர் இந்த சமூக வரலாற்றை பயிலத் தொடங்கினார். சேலம் சிறையைப் போல மதுரை சிறை இல்லை. இந்த கைதிகளின் சமூகப் பொருளாதார பின்னணி முற்றிலும் வேறுபட்டிருந்தது. ஒரு புவியியல் நிலம் சார்ந்த மக்கள் பின்பற்றும் பழக்கவழக்கங்களை மற்றவர்கள் பின்பற்றுவதில்லை. இதிலும் தென் தமிழ் நாடு முற்றிலும் வேறுபட்டிருந்தது. தென் தமிழ்நாட்டிலும் ஒவ்வொரு உள்பகுதிகள் இருந்தன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி இயல்பு இருந்தன. இவை எல்லாவற்றையும் எதிர்கொண்டபோது நல்லகண்ணு, சமூக யதார்த்தங்களை ஆய்வுசெய்து பார்க்கும் ஆய்வாளராகவே மாறிப்போனார். இதில் புதுப்புது கண்ணோட்டங்களையும், புதுப்புது பார்வைகளையும் இவரால் பெற்றுக்கொள்ள முடிந்தது. பிற்காலத்தில் பக்குவப்பட்ட நல்லகண்ணுவாக மாறுவதற்கு இது சிறந்த அடித்தளத்தை உருவாக்கிக் கொடுத்தது.

கைதிகளில் உண்ணாவிரதம் இருப்பவர்கள், உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தருபவர்கள் என்று இரண்டு பிரிவுகள் இருப்பதை இவர் நன்கறிவார். குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களிடம் சமரசமற்ற போர்க்குணம் இருப்பதை இவர் அறிந்துகொண்டார். வர்க்கம் என்ற சொல்லை, அவர் பலமுறை பயின்றிருக்கிறார். இழப்பதற்கு எதுவுமே இல்லாதவர்களிடம் அடிப்படையாக அமைந்த சமரசமற்ற போர்க்குணத்தை அவரால் இங்குதான் முழுமையாக உணர்ந்துகொள்ள முடிந்தது.

தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இன்றைய கார்ப்பரேட் உலகம் இவ்வாறான போராட்டத்திற்கு, அர்த்தமே இல்லாமல் செய்துவிட்டது. ஆனால் அன்றைய அவர்களின் வைராக்கியம் இரும்புக் கதவுகளை உடைத்து திறக்க வைத்தது. கருங்கல் பாறையிலும் சுனைநீரை பெருக்கெடுக்க வைத்தது. காலமாறுதலின் புதிய விதைகளாக மாறிக்கொண்டிருந்தார்கள். அந்த வீரியம் பின்னர் அமைந்த அரசியல் வாழ்க்கை முறையில் ஏன் இல்லாமல் போய்விட்டது என்ற வருத்தம் நம்மை போன்றவர்களுக்கு இருக்கத்தான் செய்கிறது.



www.nakkheeran.in




## எதைக்கொண்டு நிரப்பினாலும் நிரப்ப முடியாதது மனிதனின் ஆசைகள்!

அது அமைந்திருந்தால் வீரியம் கொண்ட புதிய அரசியல் ஒன்று தமிழ்நாட்டிற்கு கிடைத்திருக்கும் என்பதை என்னால் நம்பமுடிகிறது.

அதேசமயம், சிறையில் இப்படி போராடி இவர்கள் எதைத்தான் கண்டார்கள் என்ற கேள்வியை அந்தக் காலத்தில் எழுப்பியவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். இது குறித்து நான் ஆழமாக யோசித்துப் பார்க்கிறேன். சுதந்திரத்திற்குப் பின்னர் சிறைச்சாலைகளில் இன்று எத்தனையோ சீர்திருத்தங்கள் நிகழந்திருக்கின்றன. இவை அனைத்தும் அரசின் கருணை மிகுந்த ஆட்சியாளர்களின் சாதனைகளாக வெளியிடபட்டு வருகிறது. ஆனால் அதை பெறுவதற்கு சிறையிலிருந்த அன்றைய கம்யூனிஸ்டுகளின் தியாகத்தை எல்லோரும் மறந்துவிட்டார்கள். பல நாட்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள், சிறைக்காவலர்களால் அவர்களை உண்ணவைக்கும் வன்முறையில் பல் உடைந்துபோனவர்கள், உதடு கிழிந்தவர்கள் எத்தனையோ பேர் உண்டு.

கம்யூனிஸ்டுகளின் சிறைக்கோரிக்கைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தின் கோரிக்கையாக மட்டும் இல்லை. அது நீண்ட தொலைநோக்குப் பார்வை கொண்டிருந்தது. சிறையில் கைதிகளாக இருப்பவர்களும் மனிதர்களே என்பதை அதிகார வர்க்கத்திற்கு எச்சரிக்கையாக விடுத்திருந்தது. நேர்மையான அதிகாரிகள் சிலர் இதை மனிதநேய அடிப்படையில் யோசித்துப் பார்த்தார்கள். இது ஒருவிதத்தில் இவர்களுக்கு ஒரு மனித உரிமையை அறிந்துகொள்ளும் கல்வியாகவும் அமைந்தது. இந்த பார்வை அவர்களுக்கு கம்யூனிஸ்ட் கைதிகளின் மீது அளவு கடந்த மரியாதையை உருவாக்கியது. இதுதான் உண்மையான சமூக மாற்றம் என்பதை நல்லகண்ணுவால் மிக எளிதாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

தோழர்களோடு இணைந்து உருவாக்கிய உண்ணாவிரதக் கோரிக்கைகள், பல நாட்கள் படித்துப் படித்து, பலரின் ஆலோசனைகளைக் கேட்டுக் கேட்டு திருத்தப்பட்டிருந்தது. கிரிமினல் கைதிகளாக நடத்தக்கூடாது, அரசியல் கைதிகளாக நடத்த வேண்டும் என்பது முதன்மை கோரிக்கை. இந்த கோரிக்கையின் உண்மை அர்த்தத்தைக்கூட உயர் சிறை அதிகாரிகளால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதை விளக்கிச் சொல்லவேண்டிய அவசியமும் இவர்களுக்கு இருந்தது.

கோரிக்கைகளில் மற்றவை கைதிகளின் உரிமை சார்ந்தவை. கைதிகளுக்கு அவர்களும் மனிதர் என்ற முறையில் அவர்களுக்கு இருக்கும் உரிமைகள்கூட தெரிந்திருக்கவில்லை.



**–சி.மகேந்திரன்**

www.nakkheeran.in

கோரிக்கைகளைத் தெரிந்துகொண்ட பின்னர் இத்தனை உரிமைகள் தங்களுக்கு இருக்கிறதா? என்று கைதிகள் கண்களை அகல திறந்து பார்க்கத் தொடங்கினர். கோரிக்கைகள் சிறை நிர்வாகத்துக்கு வைக்கப்பட்டது. அது, கைதிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும்விதமாக இருந்தது. அதை அவர்கள் உணர்வுப்பூர்வமாக உணர்ந்துகொண்ட பின்னர், கைதிகள் அனைவரிடமும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஒருவிதமான எழுச்சியை உருவாக்கியிருந்தது.

தெளிவாகப் புரிந்துகொள்ள, இதை தோழர் நல்லகண்ணு உள்ளிட்டோர் மதுரை சிறையில் வைத்த உண்ணவிரதப் போராட்டங்களின் கோரிக்கைகளை உற்றுக் கவனிக்கவேண்டும். அந்த கோரிக்கைகளின் மையம் கம்யூனிஸ்டுகளை அரசியல் கைதிகளாக அறிவிக்க வேண்டும் என்பதுதான். அதைத்தவிர கைதிகளுக்கான பொதுவான அடக்குமுறை எதிர்ப்பு, மருத்துவ உதவி, ஊழல் இல்லாமல் உணவளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் வைக்கப்பட்டிருந்தன.

சதி வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட தோழர்கள் சிறையில் முன்வைத்திருந்த கோரிக்கைகள் பல்வேறு தகவல்களை கொண்டிருந்தன. இந்தக் கோரிக்கைகளின் வடிவமைப்பைப் பார்த்து அதிகாரிகளில் பலர் ஆச்சரியப்பட்டார்கள். கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் உயிரைப் பணயம் வைத்து கம்யூனிஸ்டுகள் தங்கள் போராட்டத்தைத் தொடங்கியிருந்தார்கள். என்றாலும், இந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்று தோழர்கள் சிலருக்கு சந்தேகமும் இருந்தது. நல்லகண்ணு உள்ளிட்ட தலைமைத் தோழர்கள், இதில் முழு நம்பிக்கைகொண்டிருந்தார்கள்.

கோரிக்கைகள் அனைவருக்கும் ஒரு தெளிவைத் தந்தது. தண்டனை பெற்று சிறைக்கு அழைத்துவரப்படும் கைதிகளை சிறைக்கு வெளியேயும் உள்ளேயும் அடித்து அழைத்து வரப்படும் நடைமுறையை உடன் நிறுத்தவேண்டும். கம்யூனிஸ்டுகள் அரசியல் கைதிகள். அவர்களுக்கு அரசியல் கைதிகளுக்கு உள்ள அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். பத்திரிகைகள் வாசிக்கும் உரிமை, நூல்கள் வாசிக்கும் உரிமை ஆகியவை உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்பதை கோரிக்கைகள் வலியுறுத்தின..

இதுதவிர இதில் முன்வைக்கப்பட்ட வேறொரு கோரிக்கைக்கு அதிகாரிகள் கிண்டலாக பதிலளித்தார்கள். கோரிக்கைகளில் ஒன்று, கம்யூனிஸ்டுகள் அனைவரையும் ஒரே பிளாக்கில் வைக்க வேண்டும் என்பது. அதிகாரிகளுக்கு இந்த கோரிக்கையில் சந்தேகம் வந்துவிட்டது. ஏன் இதைக் கேட்கிறார்கள் என்று ஆராயத் தொடங்கிவிட் டார்கள். ஜெர்மனியின் ஹிட்லர் அமைத்த நாஜி சிறைகளி லிருந்து சிலர் தப்பிச்சென்ற தகவல்களை அவர்கள் அறிவார் கள். அவ்வாறு ஏதாவது நடக்கப்போகிறதா? என்ற சந்தேகம் அவர்களுக்கு வந்துவிட்டது. ஆனால் நடக்கவில்லை. மற்றொரு செய்தி...

**(தொடரும்)**

Vol.38
Issue No:20
நக்கீரன்

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக, நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:
**நக்கீரன் கோபால்**
தொலைபேசி: 044-26881700, 26881800
மின்அஞ்சல் : nakkheeran2003@yahoo.com
nakkheeran2003@gmail.com
இணையம்: www.nakkheeran.in

**முதன்மை பொறுப்பாசிரியர்: மாவலி**
**முதன்மை துணை ஆசிரியர்கள்:**
ஆரூர் தமிழ்நாடன், இரா.த.சக்திவேல், ராம்கி

**முதன்மை சிறப்பு நிருபர்கள்:**
இரா.இளையசெல்வன்,
தாமோதரன் பிரகாஷ்
**துணை ஆசிரியர்கள் :**
க.சுப்பிரமணியன், சிவலிங்கம், கவுதமன்,
எம்.செந்தில்குமார், தா.மகாராஜன்

**ஸ்பெஷல் நியூஸ் Correspondent :** நாகேந்திரன்

**முதன்மை நிருபர்கள் :**
ஜீவா தங்கவேல், பி.சிவன், சுப்பு
**தலைமை நிருபர்கள்:** சக்திவேல், எஸ்.பி.எஸ்., ராஜா, பகத்சிங், செல்வகுமார், துரை.மகேஷ்,
**சீனியர் நிருபர்கள்:** அண்ணல், அரவிந்த்
**நிருபர்கள்:** அருண்பாண்டியன், மணிகண்டன், இளையராஜா

**முதன்மை வடிவமைப்பு :** குரு
**தலைமை வடிவமைப்பாளர்கள்:**
துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
**துணை வடிவமைப்பாளர்:**
ச.ராஜேந்திரன்

**தலைமை புகைப்படக் கலைஞர்கள்:**
எஸ்.பி.சுந்தர், ஸ்டாலின்
**துணைத் தலைமை புகைப்படக் கலைஞர்:**
ப.ராம்குமார்

**மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி**
**பொது மேலாளர் :** எஸ்.சுரேஷ்குமார்
**நிர்வாக மேலாளர் :** சி.பிரான்சிஸ்
**கணக்கு & சந்தா மேலாளர் :** சி.மோகன்
**சந்தா பிரிவு உதவியாளர்:** பார்த்திபன்
**முதன்மை காசாளர் :** பி.என்.ஆனந்த்
**தயாரிப்பு மேலாளர்கள் :**
பி.மோகன், ஆர்.கௌரிநாதன்
**விநியோக மேலாளர் :** கே.மலைக்கண்ணன்
**விநியோக உதவி மேலாளர் :** என்.சத்தியசீலன்
**விநியோகம் :** லாரன்ஸ், அரவிந்த்
**தயாரிப்பு ஒருங்கிணைப்பாளர் :** து.கண்ணன்
**தயாரிப்பு உதவி :** எச்.கண்ணன், பி.கணேசன், சந்திரோதயம், பி.வெங்கடேஷ்
**விளம்பர மேலாளர் :**
சி.சுரேஷ்குமார்
**பிரதிநிதி:** கே.சிவகுமார்
**கணக்கு ஒருங்கிணைப்பு :** ஷபீர்அகமது, வெங்கடேஷ்
**தலைமை கள மேலாளர் :** ஆர்.சீனிவாசன்
**கள மேலாளர்கள் :** கந்தசாமி, பரமசிவன், திருமலை
**பதிப்பக மேலாளர் :** தனுஷ்
**துணை பதிப்பக மேலாளர் :** கிறிஸ்டோபர்
**பதிப்பக உதவி :** ராமலிங்கம், யூனூஸ், பாண்டியன்

Legal Manager : **பாரிஸ்டர். ஆர்.வி.சாருமதி**

**Our Bankers : M/s. INDIAN BANK, Sterling Road Branch**

சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.



ஜிங்கா கோல்டு™
GOOD MANUFACTURING PRACTICE GMP CONSISTENT QUALITY
CERTIFIED ISO 9001:2008 COMPANY
Jinga Gold™
IT ONLY TAKES ONE
4 CAPSULES
4 கேப்சூல்ஸ்
ரூ.600/-
மட்டுமே
ஒன்னு போதும்
நின்னு பேசும் !
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில்
Apollo PHARMACY
MedPlus
அப்பலோ, மெட்ப்ளஸ்
உட்பட அனைத்து மருந்து
கடைகளிலும் கிடைக்கும்
SUPER STOCKIST
SRUTI'S
மாவட்ட வாரியான உதவிக்கு
90036 40742
ஹெல்ப் லைன்
9962 66 4444
For Personal Delivery
9962 808090


Advt



# காக்கிகளின் நூதன வசூல்!

## —அறந்தாங்கி பரபரப்பு!



டி.எஸ்.பி. ரவிக்குமார்



செந்தூர்பாண்டி

தமிழ்நாடு டி.ஜி.பி. அலுவலகத்திலிருந்து மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலகத்திற்கு வந்த அறிக்கையில், கடந்த காலங்களில் குற்ற வழக்குகளில் சிக்கியவர்களைக் கவனித்து, மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யவும், காவல் நிலைய குற்றப்பட்டியலில் பெயர் சேர்க்கவும் கேட்டுக்கொண்டது. இந்த அறிக்கையைத் தொடர்ந்து, பழைய குற்ற வழக்குகளில் உள்ளவர்களின் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அனைத்து டி.எஸ்.பி.க்களுக்கும் அனுப்பி, அந்தந்த பகுதி காவல் ஆய்வாளர்கள் மூலம் கண்காணித்து அறிக்கை அனுப்பக் கேட்கப்பட்டிருந்தது.

இதேபோல புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பழைய கஞ்சா வியாபாரிகள் பட்டியல் அறந்தாங்கி டி.எஸ்.பி. ரவிக்குமாருக்கு வந்தது. அந்த பட்டியலை வைத்துக்கொண்டு பழைய குற்ற வழக்குகளில் உள்ளவர்களிடம் புரோக்கர்கள் மூலம் பணம் கேட்டு மிரட்டிய சம்பவம் அறந்தாங்கி பகுதியில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. அதுதொடர்பான ஆடியோக்களும் சுற்றிச்சுற்றி வருகிறது. இதில் ஒரு ஆடியோவில், ஆய்வாளருக்காக பேசும் புரோக்கரான மாதேஷ் என்பவர், மணல் வழக்கிலுள்ள சேது என்பவரிடம் 30 ஆயிரம் ரூபாய்க்கு பேரம் பேசுகிறார். இதுகுறித்த புகார், புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்புத்தறை அதிகாரிகளுக்கு செல்ல, தகவலை தெரிந்துகொண்ட அறந்தாங்கி காவல் ஆய்வாளர் செந்தூர்பாண்டி, உடல்நிலை சரியில்லையென்று மதுரையில் ஒரு தனியார் மருத்துவமனைக்குச் சென்று படுத்துக் கொண்டார். இந்நிலையில், கடந்த 13ஆம் தேதி, இந்த ஆடியோக்களில் தொடர்புடைய மதன், மாதேஷ், வழக்கறிஞர் ராமநாதன் ஆகியோரிடம் ஏ.டி.எஸ்.பி. முரளிதரன் விசாரணை செய்தார்.

விசாரணைக்குப்பின் மதன் நம்மிடம், “சார் நான் சீட்டு நடத்தினபோது எனது வாடிக்கையாளர் சொன்ன நம்பருக்கு சீட்டுப்பணம் அனுப்பினேன். அந்த நம்பர் பெண் கஞ்சா வியாபாரியோட நம்பர்னு எனக்கு தெரியாது. அந்தப் பெண்ணை பிடிக்கும்போது என்மீதும் வழக்காகி, அப்புறமா விடுதலையாகி ஃபாரஸ்ட்ல ஒப்பந்தம் எடுத்து வேலை செய்றேன்.

இந்த நேரத்தில் பழைய குற்ற வழக்குகளில் உள்ளவர்கள் பட்டியலில் என் பெயரும் இருந்ததால், அறந்தாங்கி இன்ஸ்பெக்டர்

www.nakkheeran.in

செந்தூர்பாண்டி டீம், நான் வீட்ல இல்லாதப்ப என் வீட்டில் சோதனை செஞ்சிருக்காங்க. நான் வீட்ல இல்லாதப்ப ஏன் வந்தீங்கன்னு கேட்டேன். நான் மறுபடியும் கஞ்சா விற்கிறேன்னு எஸ்.பி. ஆபீசுக்கு தகவல் போயிருக்கிறதா சொல்லி, 2 லட்சம் கொடுத்தால், கஞ்சா விற்கல, திருந்திட்டார்னு அறிக்கை கொடுக்குறேன்னு எனக்கு வேண்டிய வக்கீல் மூலமா எங்கிட்ட பேசினார். நான் ஏன் பணம் கொடுக்கணும்னு கேட்டேன். இந்தப் பணம், டி.எஸ்.பி. உள்பட எல்லாருக்கும் தான்னு சொல்லியிருக்கார். அதேபோல், அந்த கஞ்சா பெண்ணிடம் ரூ.30 ஆயிரம் வாங்கிட்டு, என்னிடம் ஏன் 2 லட்சம் கேட்கறீங்கன்னு கேட்டேன். அப்புறமா புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்புப் போலீசாரிடம் புகார் கொடுத்துட்டேன். இதை எப்படியோ தெரிஞ்சுக்கிட்ட இன்ஸ்பெக்டர் செந்தூர்பாண்டியன் உடல்நிலை சரியில்லைன்னு மருத்துவமனைக்கு போய்ட்டார். இதுகுறித்து என்னிடம் விசாரணை நடத்தியதில் அனைத்தையும் சொல்லிட்டேன். நிச்சயம் நடவடிக்கை இருக்கும்னு நம்புறேன்" என்றார்.

மாதேஷ் நம்மிடம், "என்னிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அனைத்தையும் சொல்லியிருக்கேன். சேது என்னிடம் பேசியபோது அவரை சமாளிக்க இன்ஸ்பெக்டர் பணம் கேட்டதாக சொன்னேன்" என்றவரிடம், "வேறு சில புகார்களுக்கும் பணம் வாங்கிக் கொடுத்ததா சொல்லியிருக்கீங்களே?" என்றபோது, "அதுவும் சேதுவை சமாளிக்கச் சொன்னது தான்" என்றார். வழக்கறிஞர் ராமநாதனின் போனை எடுத்தவர், "சார் வெளியில போயிட்டார்" என்றார்.

அறந்தாங்கி காவல் நிலையம் வட்டாரத்தில், "டி.எஸ்.பி. ரவிக்குமார், அரசர்குளத்தில் ஒரு கடையில் ரூ.80 ஆயிரத்திற்கு கட்டில் வாங்கிட்டு பணம் கொடுக்கலன்னு எஸ்.பி. ஆபீஸ்வரை புகார் போனபிறகு பணம் கொடுத்து சரி பண்ணினார். யார் மேல குற்றச்சாட்டு சொல்றாங்களோ, அவங்களிடம் நட்பாக இருப்பதாக டி.எஸ்.பி மேல புகார் போனதால மத்தவங்க மேல பழியப் போட்டு தப்பிச்சுட்டார்" என்றனர்.

ஆய்வாளர் செந்தூர்பாண்டி ஏற்கெனவே கறம்பக்குடியில் இருந்தப்ப ஜாதிரீதியாக செயல்படுவதாக குற்றச்சாட்டு இருந்தது. காவலர்களை பொது இடங்களில் ஒருமையில் பேசுவார். அதனால்




கரூர் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டவர், புகார் கொடுக்க வந்த பெண்ணிடம் செல்போனில் பேசிய சில்மிசப் பேச்சால் காத்திருப்புப் பட்டியலுக்கு மாற்றப்பட்டு, சில மாதங்களுக்கு முன்புதான் அறந்தாங்கி காவல் நிலையத்திற்கு வந்துள்ளார்.

இங்கும் கலெக்சனில் இறங்கிய சூழலில் தான் மணல் வண்டி சேது, மதன் ஆகியோரிடம் புரோக்கர்கள் மூலம் பணம் கேட்டு சிக்கியிருக்கிறார். இப்ப ஏ.டி.எஸ்.பி. முரளிதரன் சார் விசாரணை செய்துள்ளதால் இனி நடவடிக்கை இருக்குமென்று நம்புகிறோம்" என்றனர்.

காவல் ஆய்வாளர் செந்தூர்பாண்டி, "நான் யார்கிட்டயும் பணம் கேட்கல. அந்த ஆடியோவுல அவங்களுக்குள்ளயே பேசிக்கிறாங்க. எனக்கு அதில் சம்பந்தமில்லை. என் மேல வீண்பழி போடுறாங்க" என்றார்.

இந்த புகார்கள் குறித்து விளக்கமறிய டி.எஸ்.பி. ரவிக்குமாரை தொடர்பு கொண்டோம், போனை எடுக்கவில்லை.

**-இரா.பகத்சிங்**

போராட்டத்தில் விவசாயிகள்





கருப்புக்கொடி போராட்டம்

"விவசாயிகளின் நலனுக்காக கட்டவேண்டிய தடுப்பணையை ஒருசிலரின் சுயநலத்திற்காக சம்பந்தமில்லாத இடத்தில் கட்டி விவசாயத்தை அழிக்கப் பார்க்கிறாங்க" என 32 கிராம மக்கள் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது மாவட்ட நிர்வாகத்தை மட்டுமின்றி தி.மு.க. மாவட்டச் செயலாளரையும் விழிபிதுங்கச் செய்துள்ளது.

நாகை மாவட்டம் திருமருகலை அடுத்துள்ள உத்தமசோழபுரம் கிராமத்தில், வெட்டாற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகுவதைத் தடுக்கும் வகையில் 49.50 கோடி மதிப்பீட்டில் புதிய கடைமடை தடுப்பணை கட்டுவதற்கான பணிகள் நடைபெற்றுவருகின்றன. இங்கு கட்டப்படும் தடுப்பணையால் கடல்நீர் உட்புகுந்து உத்தமசோழபுரம், நரிமணம், வடகரை, பூதங்குடி, பாலக்காடு, வடகுடி, பெருங்கடம்பனூர், உள்ளிட்ட 32 கிராமங்களில் உள்ள பத்தாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களும், நிலத்தடி நீரும் உப்புத்தன்மையுடையதாக மாறிவிடும் எனவும், தடுப்பணையை இதே ஊராட்சியிலுள்ள பூதங்குடியில் மாற்றியமைக்கவேண்டும் எனவும் பொதுமக்களும் விவசாயிகளும் மாவட்ட நிர்வாகத்திடம் பலமுறை கோரிக்கைவைத்தனர். ஆனால் மாவட்ட நிர்வாகமோ அதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் தடுப்பணை கட்டுவதற்கான பணிகளைத் தொடங்கிவிட்டனர். ஆத்திரமடைந்த 32 கிராம மக்களும் தடுப்பணையை மாற்றியமைக்கவேண்டும் என வலியுறுத்தி சாலைமறியல், வீட்டில் கருப்புக்கொடி ஏற்றுதல், ஆற்றில் இறங்கிப் போராட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக முற்றுகை என பல்வேறுகட்டப் போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றனர்.

இதற்கிடையில் அப்பகுதியில் உரிய ஆய்வு செய்யப்பட்டு வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே உத்தமசோழபுரத்தில் தடுப்பணை கட்டப்படுவதாக நாகை ஆட்சியர் ஆகாஷ் விளக்கமளித்துள்ளார். அதேநேரம் 'இது பொய்யான அறிக்கை. தி.மு.க. மாவட்டச் செயலாளர் கௌதமனின் சுயநலத்திற்காக இவ்வளவு தூரம் கொண்டுவந்து கட்டுகிறார்கள்' என பொதுமக்களும், விவசாயிகளும் கூறி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

நாகை ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழக காவிரி விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் பி.ஆர். பாண்டியன் தலைமையில் நடந்த போராட்டத்தில், "உத்தமசோழபுரம் தடுப்பணை குறித்து உயர்மட்டக் குழுவை அனுப்பி மறுஆய்வு செய்யவேண்டும். ஆட்சியர் விவசாயிகளைச் சந்தித்து கோரிக்கைகளை ஏற்று அரசுக்கு அனுப்பி தீர்வு காண்பதற்கு மறுத்துவிட்டார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. உண்மைக்குப் புறம்பான தகவல்களை மாவட்ட ஆட்சியர் அரசுக்குத் தெரிவித்துவருகிறார். ஒப்பந்ததாரருக்கு ஆதரவாக ஒட்டுமொத்த மக்களையும் புறக்கணித்து அவமதித்துள்ளார். எனவே அரசுக்கும், விவசாயிகளுக்கும், பொதுமக்களும் பிரிவினையை உருவாக்கும்



மா.செ.கௌதமன்



தடுப்பணை பணி

# தடுப்பணையை தி.மு.க. தடுக்கிறதா?

## –நாகை திகுதிகு!

வகையில் செயல்படும் மாவட்ட ஆட்சியர் ஆகாஷுக்கு எதிராக நாகை மாவட்டத்தில் எந்த கிராமத்துக்குச் சென்றாலும் அவருக்கு எதிராக கருப்பு கொடிகாட்டி விவசாயிகள் எதிர்ப்பு தெரிவிக்க நேரிடும். தமிழக முதல்வர் தலையிட்டு இதற்கு தீர்வு காணும் வரை கட்டுமானப் பணியை நிறுத்தி வைக்கவேண்டும்” என்றார்

இதுகுறித்து எதிர்க்கட்சி தலைவரான எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், “பூதங்குடி தடுப்பணை திட்டம் எங்கள் ஆட்சியில் கொண்டுவரப்பட்டது என்று முதல்வர் சொல்கிறார், பூதங்குடியில் கொண்டுவந்த திட்டம் எப்படி ஏழு கிலோமீட்டர் தூரம் தள்ளி உத்தமசோழபுரத்திற்கு மாறியது என்று தெரியவில்லை. நாகை மாவட்டம் பிறந்த மண் என்று முதல்வர் ஸ்டாலின் சொல்கிறார். பிறந்த மண்ணில் விவசாயிகள் சாலையில் இறங்கிப் போராடிவருகிறார்கள். இதுகுறித்து எந்தவித நடவடிக்கையும், ஆய்வுகளையும் செய்யாமல் முதல்வர் மௌனம் காத்துவருகிறார். 50 கோடி நிதி வீணாகக்கூடாது என்று உத்தமசோழபுரத்தில் தடுப்பணை கட்டி 32 கிராமங்களின் குடிநீர் மற்றும் விளைநிலங்களை அழிக்க நினைப்பது எந்த விதத்தில் நியாயம்? எனவே உத்தமசோழபுரத்தில் மேற்கொண்டு வரும் பணிகளை உடனடியாக நிறுத்துவதுடன் பூதங்குடியில் இந்த திட்டத்தை நிறைவேற்றவேண்டும். இல்லையென்றால் சென்னை தலைமைச் செயலகம் முன்பு போராட்டம் நடத்தப்படும்” என்றார்.

எடப்பாடி அறிக்கை வெளியான மறுநாளே பா.ஜ.க. மாநிலச் செயலாளர் கருப்பு முருகானந்தம், தடுப்பணை கட்டும் இடத்திற்கு விவசாயிகள், பொதுமக்களோடு சென்று பார்வையிட்டவர், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அரசு தடுப்பணையை மாற்றியமைக்கவில்லை என்றால் அ.தி.மு.க.வோடு சேர்ந்து மாபெரும் போராட்டம் நடக்கும் என போராட்டத்திற்கு நாள் குறித்தார்.

இதுகுறித்து போராட்டத்தை முன்னெடுத்து நடத்திவரும் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் மாநில நிர்வாகியான தமிழ்ச்செல்வன் கூறுகையில், “முப்போகம் விளைந்த டெல்டாவின் கடைமடைப் பகுதியான இந்தப் பகுதி பல்வேறு காரணங்களால் ஒருபோகமே கேள்விக்குறியாகியிருக்கிறது. ஒருபுறம் கர்நாடகத்தின் நயவஞ்சகத்தாலும், மறுபுறம் இயற்கையின் கோரதாண்டவத்தாலும் ஒவ்வொரு வருடமும் பேரழிவைச் சந்திக்கிறோம். போதாக்குறைக்கு சி.பி.சி.எல். போன்ற பொதுத்துறை நிறுவனங்களால் மிச்சமிருந்த விவசாயம் பாழகிக்கிடக்கிறது. இந்நிலைமையில் கடல்நீர் உள்ளே புகாமலிருக்க



தவிக்கும்போது துடுப்பை அனுப்பாதவர்கள், கரை சேர்ந்த பிறகு கப்பலை அனுப்பி என்ன பயன்?

**சிந்திப்பதைவிட நம்புவது எளிது! அதனால்தான் சிந்தனையாளர்கள் குறைவாகவும், நம்பிக்கையாளர்கள் அதிகமாகவும் இருக்கிறார்கள்!**

இந்தப் பகுதியின் பிரதான ஆறான வெட்டாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டவேண்டும் என்கிற கோரிக்கையை பல வருடங்களாக முன்வைத்தோம். அந்த கோரிக்கை தற்போது நிறைவேறியுள்ளது.

அதேநேரம் அந்த தடுப்பணையை கடற்கரைக்கு அருகாமையில் அமைத்தால் விவசாய நிலங்களுள் கடல் நீர் உள்ளே புகாமலிருக்கும், அதைவிடுத்து 15 கிலோமீட்டர் தள்ளிவந்து தடுப்பணை கட்டுவது எந்தவிதத்தில் சரியாக இருக்கும்? இடையிலுள்ள 32-க்கும் மேற்பட்ட கிராமங்களின் நிலை என்னாகும்? நிலத்தடி நீர் பாழாகி விவசாயம் அழிந்துபோகாதா?. தி.மு.க. மாவட்டச் செயலாளரான கௌதமன் இந்தப் பகுதியில் தனது மாமனார் உள்ளிட்ட பினாமிகளின் பெயரில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களை அடிமாட்டு விலைக்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி வாங்கிப் போட்டிருக்கிறார். அதில் இறால் குட்டைகளை அமைக்கவும், இடையில் இருக்கும் இறால் குட்டை அதிபர்களிடம் கோடிக்கணக்கில் பணத்தை வாங்கிக்கொண்டு இங்கு அமைக்கத் துடிக்கிறார். இதற்கு அதிகாரிகளும் உடந்தை.


பி.ஆர்.பாண்டியன்


தங்க.கதிரவன்


தமிழ்ச்செல்வன்

தற்போதைய தி.மு.க. அரசு, தங்களுக்கு விவசாயிகள் மத்தியில் நல்ல பெயர் வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம், தற்போது அதே கட்சியின் மாவட்டச் செயலாளரின் சுயநல நோக்கத்துக்காக செயல்படுத்தப்படுவது வேதனையளிக்கிறது. தமிழ்நாடு முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் விளைவித்துவருகிறார் மா.செ.. ஏற்கனவே இப்பகுதியில் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டு சுற்றுச்சூழலும் நிலத்தடிநீரும் கடுமையாக மாசுபடுத்தப்பட்டுவருகிறது. இந்த பாதிப்பை போக்குவதற்காகதான் தடுப்பணை திட்டத்தை மக்கள் போராடிப் பெற்றுள்ளார்கள். சந்தோசமாக வரவேற்கவேண்டிய இந்த திட்டத்தை போராடித் தடுக்கவேண்டிய தர்மசங்கடத்திற்கு கொண்டுவந்தது யார் என முதல்வர் ஆய்வு செய்யவேண்டும். பொதுமக்கள் விருப்பப்படியே பூதங்குடி கிழக்கு பகுதியில் தடுப்பணையை கட்ட வேண்டும்" என்கிறார்.

இதுகுறித்து தி.மு.க. மாவட்டச் செயலாளர் கௌதமனிடம் கேட்டோம், "அரசியலுக்காக நாகை அ.தி.மு.க. நகரச் செயலாளர் கிளப்பிவிட்டு குளிர்காயுறார். அங்குள்ள பொதுமக்கள் கேட்டுக்கொண்டதால் அங்கு அமைக்கிறார்கள். என்னோட மாமனார் பெயரில் நிலம் வாங்கியிருக்கிறேன் என கூறுவது அபாண்டமான பொய். அதைவிட இறால் குட்டைகளுக்காக இந்தத் திட்டம் மாற்றியமைக்கப் படுகிறது என்பது சுத்தப்பொய். அரசியலுக்காக இப்படி கண்டதைக் கிளப்பிவிடுறாங்க.. ஆய்வு செய்து அந்த இடம் வலுவில்லை என கூறியதால் மாற்றியுள்ளனர். இதில் என்னோட தலையீடு எப்படி இருக்கமுடியும்? திட்டமிட்டே தேர்தல் வரும் நேரத்தில் பிரச்சனையைக் கிளப்புறாங்க" என்கிறார்..

இதுகுறித்து நாகை அ.தி.மு.க. நகரச் செயலாளர் தங்க.கதிரவனிடம் கேட்டோம், "இது விவசாயிகள் சம்பந்தப்பட்ட பிரச்சனை. நான் அந்த தொகுதியில் கடந்த முறை போட்டியிட்டு குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோற்றேன். என்னை நம்பி வாக்களித்த மக்கள் என்னை அழைத்ததன்பேரில் போராட்டத்தில் கலந்துகொண்டேன். நான் மட்டுமல்ல, வி.சி.க., கம்யூனிஸ்ட், ஏன் தி.மு.க. வினரே கலந்துகொண்டனர். தற்போது கட்டப்படும் உத்தமசோழபுரம் ஊராட்சியிலுள்ள பூதங்குடியில் கட்ட கோரிக்கை வைத்தால், அந்த இடம் தடுப்பணை கட்ட உறுதித்தன்மை இல்லை என்கிறார்கள். அதன் அருகிலேயே கடற்கரை பக்கமாக விழுப்புரம்-நாகை தேசிய நெடுஞ்சாலைக்கான பாலம் கட்டப்படுகிறதே. அந்த இடம் எப்படி உறுதியானதாக இருக்கிறது. இதற்குப் பின்னால் அரசியல் இருக்கிறது" என்கிறார்.

தடுப்பணை, பொதுமக்களின் கோபக் கடுப்பணையாக மாறிவிடாமல் அரசு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**-க.செல்வகுமார்**

www.nakkheeran.in

(16-ம் பக்க தொடர்ச்சி)



விழிப்புணர்வு நிகழ்ச்சி

லேயே உள்ளூர் பகுதியினர் உதவியுடன் காவல்துறையும், வனத்துறையும் சிறுமி ரோஸ்லி குமாரியை தேடத் துவங்கியது. மோப்ப நாய் மற்றும் ட்ரோன் உதவியுடன் அந்தப் பகுதியை சல்லடையாக சலிக்க, 300 மீட்டர் தொலைவிலுள்ள யூகலிப்டஸ் அடர்ந்த காட்டுப்பகுதியில் காலை 9.30 மணியளவில் துண்டாக சிதைக்கப்பட்ட மார்புடன் கூடிய தலைப்பகுதியை மட்டும் மீட்டனர் மீட்புக்குழுவினர். மேலும், பல்வேறு இடங்களில் சிதறிக்கிடந்த சிறுமியின் உடல் பாகங்களை மீட்ட மீட்புக்குழு, பிரேதப் பரிசோதனைக்காக வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தது.

"போதிய விழிப்புணர்வு இல்லாததே இந்த இறப்பிற்குக் காரணம். 1995லிருந்து தற்போது வரை ஏறக்குறைய 20-க்கு மேல் பலி நிகழ்ந்திருக்கிறது. 17ஆம் நூற்றாண்டு காலகட்டங்களில் காபி மற்றும் தேயிலைக்காக வால்பாறை பகுதிக்கு வந்து சுமார் 220 சதுர கி.மீ பரப்பளவில் காடுகளை அழித்தது பிரிட்டிஷ் அரசாங்கம். அன்று இங்குள்ள காடர் உள்ளிட்ட பழங்குடியினரோடு சமதளத்தில் வசித்தவர்களையும் வேலைக்காக அமர்த்தினர் பிரிட்டிஷார். காடுகளைத் திருத்தி அழிக்கும் போது மேடு, பள்ளமான சில துண்டுச் சோலைகளை தவிர்க்கவேண்டிய சூழல் அப்போது. அந்த துண்டுச் சோலைகளே விலங்குகளுக்கு இப்பொழுது மறைவிடம். இங்கு வசிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அருகே சுமார் 2 கி.மீட்டரில் காடு இருக்கின்றது. ஆகையால் விலங்குகளோடு வசிக்க வேண்டிய கட்டாயம் மனிதர்களுக்கு. இருப்பினும் விலங்குகளை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. பொதுவாக சிறுத்தைகள் கூச்ச சுபாவம் கொண்டவை. மனிதர்களைப் பார்த்தால் விலகி ஓடும். தெரு நாய்களின் எண்ணிக்கையை கட்டுக்குள்ளும், வளர்ப்புப் பிராணிகளை பாதுகாப்பான கூண்டிற்குள்ளும், கால்நடைகளை வீட்டை விட்டுத் தூரமாக அடைத்தும், வீட்டுக் குப்பைகளையும், மாமிசக் கழிவுகளையும் உடனடியாக அப்புறப்படுத்தினாலும் மட்டுமே சிறுத்தை வராது.

பெரும்பாலான தொழிலாளர்களின் வீடுகளில் குழந்தைகள் மறைவான இடங்களில் விளையாடுவதை கண்டுகொள்வதில்லை. அதுபோல் தங்கள் வீட்டு உணவுப் பொருட்களை அருகிலுள்ள வீடுகளுக்கு கொடுக்க இரவு நேரம் பாராது அனுப்பி வைக்கின்றனர். இதனைத் தடுக்க வேண்டும். இன்னொன்று, இப்பொழுது இங்குள்ள தொழிலாளர்கள் வட மாநிலத் தொழிலாளர்கள். என்ன தான் உரக்கக் கூறினாலும் அதற்கு செவிமடுப்பதில்லை. அதனால்தான் இதுபோன்ற பலிகள். விழிப்புணர்வு இருந்தால் மட்டுமே உயிர்ப் பலியை தடுக்க முடியும்'' என்கின்றார் வனவிலங்குகள் ஆராய்ச்சியாளரான கணேஷ் ரகுநாதன்.

தமிழக அரசு சார்பில் வனத்துறை, காவல்துறை மற்றும் இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளை எனும் தனியார் அமைப்பு உள்ளிட்டவைகள் போட்டி போட்டுக்கொண்டு விலங்குகளை எதிர்கொள்ளுதல் குறித்தான விழிப்புணர்வுகளை வழங்கி வருகின்றன. இதில் நாடகம், தெருக்கூத்து ஆகியன அடக்கம். ஆனால் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை புரிந்து செயல்படுவது மக்களின் வேலைதானே?

**-நாகேந்திரன்**

நீ இருப்பதால், யார் அதிகமாக மகிழ்ச்சியடைகிறாரோ, அவர் அருகில் இருக்கப் பழகிக்கொள்!

# டம்மி மேயர்!

வேலூர் மாநகர மேயர் சுஜாதாவுக்கும் ஆளும்கட்சி கவுன்சிலர்களுக்கும் இடையே பெரிய இடைவெளி உள்ளது. இந்த இடைவெளிக்கு காரணம் மாநகர செயலாளரும், வேலூர் தொகுதி எம்.எல்.ஏ.வுமான கார்த்தி தான். “மேயரை சுதந்திரமாக செயல்படவிடவில்லை, கோப்பில் கையெழுத்து போடக்கூட எம்.எல்.ஏ. சொல்லவேண்டியிருக்கிறது. கவுன்சிலர்கள் வார்டு பிரச்சனைகளைக் கொண்டுவந்தால் எம்.எல்.ஏ.விடம் போங்கன்னு அனுப்புகிறார். மாநகராட்சிக்கு வரும் கமிஷனர்கள் எம்.எல்.ஏ. பேச்சை கேட்கவில்லையென்றால் உடனே மாற்றப்படுகிறார்கள்.

மேயர் பேச்சைத்தான் கமிஷனர் கேட்பார், எம்.எல்.ஏ. பேச்சை ஓரளவுக்கு மதிப்பார்கள், இங்கே அப்படியே தலைகீழ். கடந்த 3.5 ஆண்டுகளில் ரத்தினசாமி, ஜானகி உட்பட 3 கமிஷனர்கள் மாற்றப்பட்டு தற்போது லட்சுமணன் நியமிக்கப்பட்டுள்ளார். தன் பேச்சை கேட்காத கமிஷனர்களை எம்.எல்.ஏ. மாற்றிக்கொண்டே இருக்கிறார். விட்டா போதும்னு அதிகாரிகள் ஓடுறாங்க, அதிகாரிகளைப்போல் நாங்கள் எங்கே ஓடுவது?'' என புலம்புகிறார்கள் மாமன்ற கவுன்சிலர்கள்.

மூத்த கவுன்சிலர் இருவர் நம்மிடம், “மாநகராட்சியிலுள்ள நான்கு மண்டலத் தலைவர்களும் மேயரைப் போலவே டம்மியாகவே இருக்கிறார்கள். கடந்த 3.5 ஆண்டுகளில் இதுவரை 3 முறை தான் மண்டலக்குழு கூட்டம் நடந்துள்ளது. அதுமட்டுமல்ல, நிலைக்குழு, கல்விக்குழு, வரி விதிப்புக் குழுக் கூட்டம் என எந்த கூட்டங்களும் நடத்துவதில்லை. ஒவ்வொரு மாதமும் சாதாரண மாமன்றக் கூட்டம் நடத்தவேண்டும். கவுன்சிலர்கள் கேள்வி கேட்கிறார்கள் என்பதற்காகவே கூட்டங்களை நடத்துவதில்லை. எங்களுக்கு ஓட்டுப்போட்ட மக்கள், தண்ணீர் வரவில்லை, குப்பை அள்ளவில்லை, கழிவுநீர்க் கால்வாய் சுத்தம் செய்யவில்லை, லைட் எரியவில்லை எனக் குறை சொல்கிறார்கள். இதனை மேயரிடம் மன்றக் கூட்டத்தில்தான் சொல்வோம். ஆனால் மன்றக் கூட்டத்தில் பேசவே கூடாது என்கிறார்கள் மேயரும், எம்.எல்.ஏ.வும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறைதான் மாமன்றக் கூட்டம் நடத்தப்படுகிறது. கடந்த முறை 90 நாட்களில் நடக்க வேண்டிய கூட்டம், 93வது நாளில் தான் நடந்தது, இதனால் சட்டச்சிக்கல் வந்ததால் மேயர் மருத்துவ சிகிச்சையில் இருந்ததுபோல் சான்றிதழ் வாங்கித்தந்து சட்டரீதியாக அனுமதி வாங்கினார்கள்.

எங்கள் மண்டலத்துக்கு நிதி ஒதுக்குவதில்லை, மண்டலக்குழு தலைவரால் ஒரு தெருவிளக்குகூட மாற்ற அதிகாரம் இல்லாததால் அப்பதவி எதற்கென்று புஷ்பலதா குற்றஞ்சாட்டினார். மேயர் பதவி கிடைக்காத பொறாமையின்னாங்க. வார்டுகளில் பணிகளே நடப்பதில்லையென துணைமேயர் சுனில்குமார் குற்றஞ்சாட்டினால், அமைச்சர் துரைமுருகனின் ஆதரவாளர்னு அவரை சொன்னாங்க. இப்படி எந்த கவுன்சிலர் கோரிக்கை வைத்தாலும் எதையாவது சொல்லி திசை திருப்புறாங்க.


மேயர் சுஜாதா

மாநகராட்சியில் நடக்கும் கான்ட்ராக்ட் பணிகளுக்கு 15 சதவீத கமிஷனை ஒப்பந்ததாரர்களிடமிருந்து வாங்கும் மாநகரச் செயலாளர் கார்த்தி எம்.எல்.ஏ., இதுவரை யாருக்கும்

www.nakkheeran.in

பிரித்துத் தரவில்லை. காட்பாடி தொகுதிக்குள் வரும் 15 வார்டுகளுக்கான பணிகளை பிரிப்பது, கமிஷன் பெறுவதை எம்.பி. கதிர்ஆனந்த், பகுதிச்செயலாளர் வன்னிராஜா, துணைமேயர் சுனில்குமாரே கவனித்துக்கொள்கிறார்கள். கவுன்சிலர்களுக்கான பங்கை தருவதில்லை. அணைக்கட்டு தொகுதிக்குள் வரும் 6 மாநகர வார்டு பிரச்சனையை மட்டும் மா.செ. நந்தகுமார் கவனித்துக்கொள்கிறார். மீதியுள்ள 39 வார்டுகள் வேலூர் எம்.எல்.ஏ. தொகுதிக்குள் வருகிறது. எம்.எல்.ஏ. கார்த்தியும் எங்களுக்கான பங்கை, பணிகளை தருவதில்லை. அவர் மா.செ.வாகவும் இருப்பதால் எங்களால் அவரை எதிர்த்துப்பேச முடியவில்லை.


கதிர் ஆனந்த்


சுனில்குமார்

மூன்று மாதத்துக்கு ஒருமுறை நடைபெறும் மாமன்றக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர் எனச் சொல்லிக்கொண்டு கார்த்தி வந்து உட்கார்ந்து கொள்வதால் அங்கேயும் எங்களால் பேசமுடியவில்லை. கவுன்சிலர்கள் யாராவது மேயரை கேள்வி கேட்டால் எம்.எல்.ஏ. அவர்களை ஒதுக்குகிறார், அடுத்த முறை சீட் கிடையாதென்றும் மிரட்டுகிறார்கள்.

கடந்த மாதம் 9 கவுன்சிலர்கள் பொதுச் செயலாளர் துரைமுருகனை சென்னையில் சந்தித்து குமுறினோம். ஊருக்கு வரும் போது பேசிக்கலாம்னு அனுப்பி வைத்தார். இதற்கிடையே மாநகராட்சி மோதல் குறித்த செய்திகள் வெளியானதால் தேர்தல் மண்டலப் பொறுப்பாளர் அமைச்சர் எ.வ.வேலு, அறிவாலயத்துக்கு வாங்களென்று கடந்த 10ஆம் தேதி மா.செ. நந்தகுமார், எம்.பி. கதிர்ஆனந்த், மாநகரச்செயலாளர் கார்த்தி, மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில்குமார், மண்டலத் தலைவர் புஷ்பலதாவை வரவைத்து அமைப்புச்செயலாளர் அறையில் வைத்து விசாரணை நடத்தினார். அங்கே மா.செ. - எம்.பி. - மாநகரச்செயலாளர் இடையே காரசாரமாக சண்டை நடந்தது. தன்னை மண்டலக் கூட்டம் நடத்த அனுமதிப்பதில்லை, மண்டலத்துக்கு தேவையான நிதி ஒதுக்கவில்லை எனக் குற்றம்சாட்டினார் புஷ்பலதா.


கார்த்தி எம்.எல்.ஏ.

இப்படி நிர்வாகம் நடத்தினால் எப்படியென்று மேயரிடம் அமைச்சர் கேள்வி கேட்டதும் மேயர் கார்த்தியை பார்த்துள்ளார். இதுவரை மாநகராட்சியில் 150 கோடி ரூபாய்க்கான பணிகள் நடந்துள்ளன. அதற்காக 15 சதவீத கமிஷன் எடுத்துள்ளீர்கள். 7.5 சதவீதம் 'எம்' கமிஷனாக போய்விட்டது. மீதியுள்ள 7.5 சதவீத கமிஷனில் மா.செ., மாநகரச்செயலாளர், எம்.எல்.ஏ. கவுன்சிலர்களுக்கு பிரித்துத்தர வேண்டும் என நிழல் மேயராக வலம்வரும் எம்.எல்.ஏ. கார்த்தியிடம் சொல்லப்பட்டது. தந்துவிடுகிறேன் எனச்சொல்லிவிட்டு வந்தவர், இப்போதுவரை தரவில்லை. முதலமைச்சர் சொன்னாலாவது தருவாரான்னு தெரியல" எனப் புலம்புகிறார்கள் கவுன்சிலர்கள்.

டம்மி மேயரால் கவுன்சிலர்கள் பெரும் கடுப்பிலிருக்கிறார்கள்.

**-து.ராஜா**

# ாரிச்சுருட்டும் எம்.எல்.ஏ.! அறிவாலயத்தில் பஞ்சாயத்து!



இஸ்ரேலில் சேதமடைந்த கட்டடங்கள்



பற்றியெரியும் மொசாட்

# உக்கிரமான இஸ்ரேல் - ஈரான் போர்!

# நாடு திரும்பிய இந்தியர்கள்!

இஸ்ரேலுக்கும் ஈரானுக்குமான போர் உச்சத்தை அடைந்துள்ளது. இஸ்ரேலைப் பொறுத்தவரை அதன் உளவு அமைப்பின் கட்டமைப்பு மிகவும் வலிமையானது. உளவு பார்ப்பது தொடர்பான மென்பொருட்கள் தயாரிப்பிலும் தீவிரமாக ஈடுபட்டுவருகிறது. இஸ்ரேல் தயாரித்த பெகாசஸ் உளவு மென்பொருளை இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் வாங்கியிருக்கின்றன. இதன்மூலம் யாருடைய அந்தரங்கத் தகவலையும் திரட்டவும், அவர்களுக்கே தெரியாமல் வேவு பார்க்கவும் இயலும். அதேபோல், எதிரி நாட்டுக்குள் ஊடுருவக்கூடிய திறன்வாய்ந்த உளவுப்பிரிவினரும் இஸ்ரேலுக்கு உண்டு. இஸ்ரேலின் ராணுவ அமைப்புக்கு இணையாக அதன் உளவுப்பிரிவான மொசாட்டின் செயல்பாடு இருக்கும்.

இவ்வளவு திறன்வாய்ந்த மொசாட் அமைப்பினுடைய பயிற்சி மையம், டெல் அவிவ் அருகிலுள்ள ஹெர்ஸ்லியாவில் இருக்கிறது. அந்த மையத்தின் மீது குறிவைத்து ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் அந்த மையம் தீப்பற்றி எரியும் காட்சி, இஸ்ரேலை மட்டுமின்றி உலகையே வியப்பில் ஆழ்த்தியது. சிங்கத்தை அதன் குகைக்குள்ளேயே சென்று சந்திப்பதற்கு இணையான தாக்குதல் இது. இத்தாக்குதல் குறித்து ஈரானின் புரட்சிகர காவல் படை உறுதி செய்துள்ளது. இத்தாக்குதல் குறித்த வீடியோவுடன் ஈரானின் தொலைக்காட்சியில் செய்தி வெளியிடப்பட்டது. அச்செய்தியில் “இஸ்ரேலின் ராணுவ புலனாய்வு மையமான அமானையும், டெல் அவிவில் உள்ள பயங்கரவாத நடவடிக்கை திட்டமிடல் மையமான மொசாட்டையும் தாக்கினோம். அவை தற்போது தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கின்றன” என்று தீப்பிடித்தெரியும் கட்டடங்களோடு செய்தி வெளியிட்டது.

'ஆபரேஷன் ட்ரூ ப்ராமிஸ்-3' என்ற பெயரில் இஸ்ரேலின் டெல் அவிவ், ஜெருசலேம் நகரங்களின் மீது ஈரான் பலத்த குண்டுமழை பொழிந்தது. இத்தாக்குதல் குறித்து ஈரானின் காவல் படை மூத்த தளபதி மோசேன் ரெஸேய் கூறுகையில், “ஈரானின் ராணுவ பலத்தில் 30% அளவுக்கு தான் பயன்படுத்தியுள்ளோம். அதேபோல், ஈரானின் மொத்த திறனில் 5% மட்டுமே



நாடு திரும்பும் இந்தியர்கள்

www.nakkheeran.in



தற்போதைய போரில் பயன்படுத்தியிருக்கிறோம். தேவைக்கேற்ப முழுபலத்தையும் பயன்படுத்து வோம்" என்று எச்சரித்துள்ளார்.

இதேவேளை, ஈரான் மீதான தாக்குதலை இஸ்ரேலும் அதிகப்படுத்தியுள்ளது. மேற்கு ஈரானிலுள்ள ராணுவ இலக்குகள் மீது குறிவைத்து இஸ்ரேல் ராணுவம் விரிவான தாக்குதல்களை நடத்தியது. இத்தாக்குதல்களில் ஈரானிலுள்ள ஏவுகணை சேமிப்பு மற்றும் ஏவுதல் உள் கட்டமைப்புகள் தாக்கப்பட்டன என்றும், மேற்கு ஈரானில் தரையிலிருந்து வான் நோக்கி தாக்கும் ஏவுகணைகள் மற்றும் யு.ஏ.வி. சேமிப்பு தளங்கள் தாக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளது.

ஈரான் வசமுள்ள மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தக்கூடிய பாலிஸ்டிக் ஏவுகணைகளை அழிப்பதன்மூலம் தங்களுக்கு எதிரான அச் சுறுத்தலை முடிவுக்கு கொண்டுவர முடியுமென்றார் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு. மேலும், ஈரானின் உயரிய தலைவரான அயதுல்லா கமேனியை நவீனகால ஹிட்லரோடு ஒப்பிட்ட நெதன்யாகு, கமேனி கொல்லப்பட வேண்டு மென்றும், அதன்பின் போர் முடிவுக்கு வருமென்றும் தெரிவித்தார்.

இந்நிலையில், கனடாவில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஈரான் - இஸ்ரேல் போர்ப்பதற்ற சூழலில், பாதியிலேயே முடித்துக்கொண்டு மாநாட்டிலிருந்து வெளியேறினார். ஈரான் அணு ஆயுதத்தை வைத்திருப்பதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது எனக் குறிப்பிட்ட ட்ரம்ப், ஈரானின் உச்ச தலைவரான அயதுல்லா அலி கமேனி நிபந்தனையின்றி சரணடைய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ட்ரம்புக்கு பதிலடியாக நாட்டு மக்களிடம் வீடியோவில் பேசிய கமேனி, "ட்ரம்பின் அச்சுறுத்தும், அபத்தமான அறிக்கைகளை நிராகரிக்கிறேன். ஈரான் ஒருபோதும் அடிபணி யாது. இதில் அமெரிக்கா தலையிட்டால் ஈடுசெய்ய முடியாத சேதத்தை அமெரிக்காவும் சந்திக்க வேண்டியிருக்கும்" என்று அமெரிக்காவுக்கும் சேர்த்தே கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்நிலையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்கா நேரடியாகப் போரில் இறங்குவது குறித்து இரண்டு வாரங்களில் முடிவெடுக்கப்படும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த போரில் ஈரான் மீது இஸ்ரேல் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துமோ என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், இஸ்ரேல் அணு ஆயுதத்தை பயன்படுத்தினால், பதிலுக்கு பாகிஸ்தான் மூலமாக அணு ஆயுதத்தை நாங்களும் பயன்படுத்துவோம் என்று அதிரடியாகக் கூறி இஸ்ரேலை மட்டுமல்லாது, உலக நாடுகள் அனைத்தையும் ஈரான் பதட்டத்துக்குள்ளாக்கியுள்ளது. இந்த போரில், இஸ்ரேலுக்கு எதிராக இஸ்லாமிய நாடுகள் ஒன்றிணைய வேண்டுமென்று பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் கேட்டுக்கொண்டுள்ளார். ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நாளுக்கு நாள் மோதல் அதிகரித்து வரும் நிலையில், ஆஸ்திரேலியா, செக் குடியரசு, ஸ்லோவாகியா உள்ளிட்ட நாடுகள் ஈரானிலுள்ள தங்கள் தூதரகங்களை பாதுகாப்பு காரணங்களுக்காக தற்காலிகமாக மூடியுள்ளன.

இந்நிலையில், ஈரானில் வசித்துவரும் 4000க்கும் மேற்பட்ட இந்தியர்களில், முதற்கட்ட மாக 110 பேர், அர்மீனியா, தோகா வழியாக டெல்லி வந்தடைந்தனர். அடுத்தகட்டமாக ஈரானின் மஹான் ஏர்வேஸ் நிறுவனத்தின் விமானங்கள் மூலமாக இந்திய மாணவர்களையும், ஆன்மிக யாத்திரை சென்றவர்களையும் அழைத்துவர இந்தியா ஏற்பாடு செய்தது. அதன்படி இரண்டாம் கட்டமாக 290 பேர் ஈரானின் டெஹ்ரானிலிருந்து பத்திரமாக இந்தியாவுக்கு அழைத்துவரப்பட்டனர். ஈரானிலிருந்து இந்தியா வுக்கு வரவிரும்பும் அனைத்து இந்தியர்களும் மீட்கப்படுவார்கள் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

**-தெ.சு.கவுதமன்**

## சினிமா கொட்டகை 100

# காட்சியின் வழியே ஆட்சி அதிகாரம்!

புரட்சியினால் வென்றெடுக்க வேண்டிய உரிமையை பூஜை, புனஸ்காரத்தினால் அடைந்திட முடியாது என்பது உலக நியதி. அதை மாற்றிக் காட்டிய அதிசய நாடாக நமது இந்திய தேசம் விளங்குகிறது. கத்தியின்றி, ரத்தமின்றி நமது தேசப் பிதா சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தார். 'அகிம்சை' என்ற புதுவழி அவருக்கான போராட்டக் கருவி யானது. அதேபோல் தமிழகத்தில் நிலைத்திருந்த காங்கிரஸ் ஆட்சியை அகற்றுவதற்கு பேரறிஞர் அண்ணா கையாண்ட ஆயுதம் பகுத்தறிவு. எழுத்தாகவும், பேச்சாகவும், நாடகமாகவும், சினிமா ஆகவும்... பல ரூபங்களில் பகுத்தறிவானது, பட்டி தொட்டியெங்கும் பாமரனின் சிந்தனையை தூண்டிவிடும் தணலாக, நெருப்பாக பரப்பி விடப்பட்டது. இதில் திரைப்படங்களுக்கும், நாடகங்களுக்கும், பாடல்களுக்கும், வசனங் களுக்கும் முக்கிய பங்குண்டு.

'வேலைக்காரி', 'பராசக்தி', 'சொர்க்க வாசல்', 'நாடோடி மன்னன்', 'ரத்தக் கண்ணீர்' போன்ற படங்களில் பங்களிப்பு மறுக்க முடியாத ஒன்று. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் தமிழன் தன்னை மீண்டும் உணர ஆரம்பித்தது திரைப்படக் கொட்டகைகளில்தான். மொழிப் போராட்டத்துக்கான தூண்டுகோல், பகுத்தறிவுவாதிகளின் பேச்சிலும், எழுத்திலும்தான் தொடங்கியது. உலக அதிசயங்களை நடத்திக் காட்டியது நமது கலையுலகம். கூத்தாடிகளை கலைஞர்களாக்கியது. அந்த கலைஞர்களை வீதியில் இறங்கிப் போராடவும் வைத்தது. அந்தக் கலைஞர்களை தேர்தல்களில் வெற்றிபெற வைத்து நாடாளவும் வைத்தது.

'ஆர்ட்டிகிள்-15' என்கிற பிறமொழிப் படம் ஒன்று சில வருடங்களுக்கு முன் வெளியானது. சாதியக் கொடுமைகளையும், அதை எதிர்த்துப் போராடும் அரசு அதிகாரியையும் பற்றிய கதை இது. தெலுங்கில் பல வருடங்களுக்கு முன் நான் எழுதிய கதை படமாக வந்தது. செருப்பு தைக்கும் தொழிலாளி ஊர்த்தலைவனாகி, ஊர் மக்களின் வாழ்க்கைக்கான நன்மைகளைச் செய்கிறான். இந்தக் கதை மூலம் நான் வலியுறுத்திய விஷயம்... அதிகாரத்தில் இருப்பவர் நல்லாட்சி தருகிறாரா? என்பதைத்தான் பார்க்க வேண்டும். ஆள்பவரை சாதி கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது என்பதுதான். இந்தப் படம் தெலுங்கில் பெரும் வெற்றி. தமிழில் எடுக்க எவரும் முன்வரவில்லை.

'முதலாளியம்மா' என்ற இன்னொரு என் படத்தின் கதை.

'ஊரைச் சுருட்டி தன் வீட்டு உலையில் போடும் குடும்பம் அந்த முதலாளியம்மா குடும்பம். அவ வேலைக்காரி வேற ஜாதி. ஆனால் விசுவாசம் மிக்க வள். முதலாளியம்மாவுக்காக, தன் உயிரையும் தயங்காமல் கொடுப்பாள். அவளின் விசுவாசத்துக்கும், நன்னடத்தைக்காக வும் வேலைக்காரி மகளை கல்லூரி யில் படிக்க வைக்கிறாள். அவள்



டைரக்டர்-ரைட்டர் வி.சி. குகநாதன்

www.nakkheeran.in

கல்லூரியில் சாதிக்கொடுமையை சகிக்க நேரிடுகிறது. ஊருக்கு வரும் அவள் ஊரை திருத்த முற்படுகிறாள். தேர்தலில் முதலாளியம்மாவை தோற்கடித்து ஊர்த்தலைவியாகிறாள். இதனால் தாய் கோப மடைந்து, மகளை வெறுப்பதோடு, முதலாளியம்மா வோடு சேர்ந்து மகளை பழிவாங்க முற்படுகிறாள். ஆனால் தந்தை தன் மகள் பக்கம் நின்று போராடுகிறான். இந்தக் கதையும் வெற்றிகரமாக ஓடியது. அதேபோல் கே.எஸ்.கோபாலகிருஷ்ண னின் 'நத்தையில் முத்து', 'குறத்தி மகன்' போன்ற சாதிக்கொடுமையை பிரதிபலிக்கும் படங்களை எடுத்தார், வெற்றியும் பெற்றார். தற்போது பா.ரஞ்சித், மாரி செல்வராஜ், வெற்றிமாறன் ஆகியோர் படங்கள்... உந்துசக்தியாக மாறியுள்ளது.

**ஈ**ழப் போராட்டம் உச்சநிலையை அடைந்த போது வேல்முருகனோ, சீமானோ, திருமாவோ, சுப.வீரபாண்டியனோ, கவிஞர் மேத்தாவோ, கோவில்பட்டி கோபியோ, வக்கீல் ராவணனோ, கோவை ராமகிருஷ்ணனோ, திருப்பத்தூர் எழிலோ, வீரமணியோ... என்ன குலம், என்ன மதம் என்று கேட்டா ஒன்று சேர்ந்தார்கள். இனம் என்று வரும்போது தமிழர்கள் மதமோ, ஜாதியோ பார்க்கமாட்டார்கள். மொழியென்று வந்தாலும் அப்படித்தான்.

ஆனால் இன்று கலையுலகில் கறுப்புத் தமிழர்களின் படைப்புகள் சிந்திக்க வைக்கின்றன. ஆரிய சூழ்ச்சி வலைகள் ஆங்காங்கே அறுத்தெறி யப்படுகின்றன. தமிழ் மாநிலத்தின் தனிச்சிறப்பே இதுதான். இந்த வளர்ச்சி மற்ற மாநிலங்களில் மந்தமாக இருக்கிறது. அதனால்தான் ஜனநாயக விரோத சக்தி ஒன்றிய அரசை தங்கள் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க முடிகிறது. 'திராவிட மாடல்' எல்லா மாநிலங்களிலும் முழு வளர்ச்சி பெற்றால்... மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி மலரும். அதுமட்டுமல்ல... மண்ணின் பூர்வக்குடி ஆட்சியில் அதிக பங்கை அடைவார்கள். ஜனநாயகம் தழைக்கும், பணநாயகமும் கார்ப்பரேட்டுகளும் கரைந்துபோவார்கள். ஆரியமும், அதன் ஆதரவாளர்களும் அரசு, ஆட்சிப் பக்கம் வர அஞ்சுவார்கள். இதனை அரசியல்வாதிகளினால் மட்டும் செய்ய முடியாது. கலையுலகமும், இலக்கியவாதிகளும், கவிஞர்களும் ஒன்றிணைந்து கைகொடுக்க வேண்டும்.

**தா**ய்க்கொரு பிள்ளை. இது நாகேஸ்வரராவ், லட்சுமி, அஞ்சலிதேவி ஆகியோர் நடிக்க, என் எழுத்தில் டி.ராமராவ் இயக்கத்தில்



கலைஞர் -சிவாஜியின் 'பராசக்தி'



எம்.ஜி.ஆரின் 'நாடோடி மன்னன்'

www.nakkheeran.in

**வாழ்க்கை என்பது சீட்டாட்டம் போலதான் -குலுக்கிப் போடும்போது என்ன சீட்டு வருகிறது என்பது விதி! வந்த சீட்டில் எப்படி ஆடுவது என்பது மதி!**

மாதவி கம்பைன்ஸ் தயாரிப்பில் 'சுபுத்ருடு' என்ற பெயரில் வெளியான தெலுங்குப் படத்தின் தமிழ் ரீ-மேக். தமிழில் ஜெய்சங்கர், ஏவி.எம்.ராஜன், சாவித்திரி, வெண்ணிற ஆடை நிர்மலா ஆகியோர் நடித்து, பட்டு இயக்கத்தில் வெளிவந்து பெரிய வெற்றியடைந்த படம். தெலுங்கில் நூறு நாட்கள் ஓடிய படம். இந்தியில் ராஜேஷ்கன்னா நடிக்க விரும்பிய படம். சில மாதங்களுக்கு முன் ஏவி.எம். சரவணன் இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, எனக்கு போன்பண்ணி பாராட்டியதுடன், சின்னச் சின்ன மாற்றங்களைச் செய்து தற்போதுள்ள நடிக, நடிகையருடன் எடுத்தால் நல்ல வெற்றியைத் தரும் எனச் சொன்னார்.




அண்ணாவின் 'வேலைக்காரி'



எம்.ஆர்.ராதாவின் 'ரத்தக் கண்ணீர்'

இது உருவான விதமே ஒரு சுவாரஸ்மான கதை. ஜெயார் மூவிசிலிருந்து என் சொந்த அலுவலகத்தை ஆரம்பித்த சமயம், ஏவி.எம். அவர்கள் என்னைக் கூப்பிட்டு, நீங்கள் ஒரு படம் தயாரியுங்கள் என உற்சாகப்படுத்தினார். அதற்கு என்ன காரணம் என முன்பே விலாவாரியாக எழுதியுள்ளேன். "தயாரிக்க என்னிடம் பணமேது" என ஏவி.எம்.மிடம் நான் சொன்னபோது, 'உங்கள் பணம் எண்பத்து ரெண்டாயிரம் எங்க அலுவலகத்திலே வாங்காமல் விட்டு வச்சிருக்கீங்க. அத்தோடு இன்னும் பதினெட்டாயிரம் சேர்த்து ஒரு லட்சம் ஆக்கிடுங்க, மீதி தேவையான மொத்தப் பணத்தையும் நானே தருகிறேன்' என்றார். நானும் தலையாட்டிவிட்டு வந்துவிட்டேன். அவ்வளவு பணத்துக்கு எங்கே போறது? அந்த சமயத்தில் சொல்லி வைத்தது போல் மாதவி கம்பைன்ஸ் அதிபர் என்னைத் தேடிவந்து நாகேஸ்வரராவ் நடிக்க ஒரு கதை வேணும் என்று கேட்டார். உண்மையாக அப்போது அவருக்கேற்ற கதை என் கையில் இல்லை. ஆனால் கடவுள் எனக்கொரு வழி காட்டினார். இங்கிறுட் பெர்க்மன்னும், அந்தோனி குவின்னும் நடித்த 'விசிட்' (Visit) என்ற ஆங்கிலப் படத்தைப் பார்த்தேன். ஒரு இந்திய கதைபோல் அது இருந்தது. எப்படி 'Pittiless Three' என்ற ஆங்கிலப் படத்தை தமிழில் மாற்றி எழுதினேனோ, அதே போல் 'Visit' கதையை சற்று மாற்றி 'சுபுத்ருடு' என எழுதினேன். இது ஒரு வில்லனால் உடலுறவுக் குப் பின்னால் கைவிடப்பட்ட ஒரு அப்பாவிப் பெண்ணின் கதை. அவளைக் கைவிடுவதற்கு அவன் செய்த சூழ்ச்சி... அந்தப் பெண் வேறு சில ஆண்களோடும் கள்ளத் தொடர்பில் இருந்ததாக சாட்சிகளோடு ஊர்ப்பஞ்சாயத்து முன்னால் நிரூபிக்கிறான். அவள் ஊரைவிட்டே விரட்டப்படுகிறாள். பதினேழு வருடங்கள் கழித்து அவள் பணத்துடன் வேறு பணக்கார பெண் போல் அதே ஊருக்கு திரும்பி வருகிறாள். தன் பண பலத்தை வைத்து ஊரையே தன் பக்கம் ஈர்க்கிறாள். தன்னை ஏமாற்றிய வில்லனை தனிமைப்படுத்துகிறாள். இறுதியில் அதே ஊரார் வில்லனை கொல்லுமளவு... பணத்தை தானதருமங்கள் செய்து தூண்டிவிடுகிறாள். பழிவாங்குவதே அவளது ஒரே நோக்கம். இதனை மிகச்சிறப்பாக நம்ம ஊர் ஸ்டைலுக்கு மாற்றினேன்... படம் பெரும்வெற்றி. இதற்கு கிடைத்த சம்பளம் ஏவி.எம்.மில் இருந்த பணத்துடன் சேர்க்கப்பட்டு, நான் தயாரிப்பாளராக மூலதனம் ஆகியது.

நக்கீரன் பத்திரிகை ஆதரவில் 'சினிமா கொட்டகை' என்ற தலைப்பில் நூறு கட்டுரைகளை முடித்துவிட்டேன். நூற்றுக்கணக்கானோரின் பாராட்டைப் பெற்றேன். இதில் ஒரு இடைவேளை எடுத்துக்கொண்டு... மீண்டும் எழுதுவேன். வாசகர்களை வணங்கி ஒரு சிறு இடைவேளை!

**என்றும் நன்றியுடன்...**

**வி.செ.குகநாதன்**

www.nakkheeran.in


நாள்
ஜூன் 25, 26, 2025
இடம் : திருப்பத்தூர் மாவட்டம்
ARASU ARTS
கலைஞர் சிலை திறப்பு மற்றும்
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு
திருப்பத்தூர் மாவட்டத்திற்கு வருகை தரும்
தமிழ்நாட்டு மக்களின்
பாதுகாவலரே
வருக. வருக..
துரைமுருகன்
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
எ.வ.வேலு
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
க.தேவராஜி MLA
மாவட்ட கழக செயலாளர்
T.M.கதிர் ஆனந்த் MP, MBA., USA
வேலூர் நாடாளுமன்ற தொகுதி
அ.செ.வில்வநாதன் MLA
ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி
நல்லதம்பி MLA
திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி
N.K.R.சூரியகுமார் Ex.MLA
மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர்
அன்புடன் வரவேற்று மகிழும்
V.S.ஞானவேலன் M.Tech., IT
ஒன்றிய கழகச் செயலாளர், ஆலங்காயம் மேற்கு
N.பிரியதர்ஷினி ஞானவேலன் M.Sc., M.Phil., Phd.,
மாவட்ட ஊராட்சிக்குழுத் துணைத் தலைவர், மாவட்ட திட்டகுழு உறுப்பினர்
ஆலங்காயம் மேற்கு ஒன்றிய தி.மு.க. திருப்பத்தூர் மாவட்டம்

# தி.மு.க. பவர் சென்டர்களை சந்தித்த வேலுமணி! எடப்பாடி ஷாக்!

"ஹலோ தலைவரே, தேர்தல் நெருங்க நெருங்க, அனைத்து அரசியல் கட்சிகளிலும் பரபரப்பான காட்சிகளைப் பார்க்க முடிகிறது."

"ஆமாம்பா, இந்த நேரத்தில் தி.மு.க.வில் மாறன் சகோதரர்களான, கலாநிதி மற்றும் தயாநிதிக்கு இடையே சொத்து தொடர்பான சகோதர யுத்தமும் வெடித்திருக் கிறதே?"

"ஆமாங்க தலைவரே, அண்ணன் கலாநிதிக்கு, தம்பி தயாநிதி அனுப்பியுள்ள சட்டரீதியிலான நோட்டீஸ், அரசியல் ரீதியாகவும் பரபரப்பை உருவாக்கியிருக்கிறது. இது, இந்திய தொழிலதிபர்கள் வட்டாரத்திலும், பங்கு வர்த்தகம் தொடர்பான வட்டாரங்களிலும் கூட அதிர்வுகளை ஏற்படுத்திவருகிறது. கலாநிதிக்கு நோட்டீஸ் அனுப்புவதற்கு முன்பு, முதல்வர் ஸ்டாலினை சந்தித்திருக் கிறார் தயாநிதி. ஸ்டாலினோ, இது உங்கள் தொழில்ரீதியிலான விவகாரம். இதில் நான் தலையிடுவது ஆரோக்கியமாக இருக்காது என்று சொன்னா ராம். தி.மு.க.வில் இருக்கும் ஒருசில சீனியர்களோ, இந்த விவகாரத்தை ரசிக்கிறார்களாம். இந்த நிலையில் மாறன் சகோதரர்களுக்கு எதிராக இதில் இருக்கும் விசயங்கள் குறித்து, மத்திய நிதி அமைச்சகமும், மத்திய உளவுத்துறை யும் ஆராய்ந்து, பிரதமர் மோடிக்கும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கும் சீக்ரெட் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறதாம். இதையறிந்த ஸ்டாலின், இப்போது மாறன் சகோதரர்களிடம் சமாதானம் பேச ஆரம்பித்திருக்கிறாராம்."


வேலுமணி

"அரசியல் புள்ளிகள் பலரும் ஏலக்காய் வர்த்தகத்தில் முதலீடு செய்துவருகிறார்களே?"

"உண்மைதாங்க தலைவரே.. பெரும்பாலான இந்நாள், முன்னாள் மந்திரிகள் தொடங்கி, பவர்ஃபுல் அரசியல் புள்ளிகள் பலரும் ஏலக்காய் வர்த்தகத்தில் இறங்கியிருக்கிறார்கள். இவர்களுக்கு, கொள்முதலில் எப்படி வணிகவரித்துறையை ஏமாற்றி, கோடிக்கணக்கில் சம்பாதிக்கலாம் என வர்த்தக சூதாடிகள் வழிகாட்டுகிறார்கள். நாட்டின் ஏலக்காய் தேவைக்கு, கேரளா இடுக்கி மாவட்டம் 70 சதவிகிதமும், தேனி மாவட்டம் 30 சதவிகிதமும் உற்பத்தி செய்து தருகின்றன. தமிழக அளவில் ஏலக்காய் ஏலம், போடியில்தான் நடைபெறுகிறது. இதில் பலரும் இறந்தவர்களின் பெயர்களில் நிறுவனங்களை ஆரம்பித்து, வருமான வரித்துறைக்கு செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தாமல், குறுக்கு வழியில் மோசடியில் ஈடுபட்டு கோடி கோடியாய் சுருட்டி வருகின்றனர். தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் இது குறித்து வழக்குகள் பல பதிவாகி இருந்தாலும், வரி ஏய்ப்பு மெகா மோசடி இன்றுவரை தொடர்கிறது. இந்த வர்த்தக சூதாட்டத்தை தலைமையேற்றுச் செய்வது போடியிலுள்ள 'சிவனின்' பெயர் கொண்டவர். இவர் மூலமாகத்தான் முன்னாள் முதல்வர் உள்ளிட்ட சில அரசியல் புள்ளிகள் பணத்தை முதலீடு செய்து, வருமான



ஈரானிலிருந்து மேலும் 285 இந்தியர்கள் நேற்று இரவு நாடு திரும்பினர்

ராங்-கால்!

வரித்துறையை ஏமாற்றி வருகிறார்களாம்.”

“தி.மு.க. தலைமையில் சில மாற்றங்களை ஏற்படுத்த அக்கட்சித் தலைமை முயற்சிக்கிறது என்றும் தகவல் வருகிறதே?”

“கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றம் செய்யத் திட்டமிட்டிருக்கிறாராம் தி.மு.க. தலைவர் ஸ்டாலின். கட்சியின் தலைமைப் பொறுப்புகளில் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகள் முக்கியமானவை. அதிகாரமிக்கவை. கட்சியின் அனைத்துச் செயல்பாடுகளும் தலைவரின் உத்தரவின்படி, பொதுச்செயலாளர் பெயரில் அறிவிப்பு வெளியாகும். எந்த ஒரு முடிவாக இருந்தாலும் தலைவரும் பொதுச்செயலாளரும் ஆலோசித்து, விவாதித்து இறுதி முடிவை எடுப்பார்கள். அந்த வகையில், மறைந்த கலைஞரும், பேராசிரியரும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக தி.மு.க.வில் இயங்கினர். தற்போது தி.மு.க.வின் பொதுச்செயலாளராக துரைமுருகன், பொருளாளராக டி.ஆர்.பாலு ஆகியோர் உள்ளனர். இந்த நிலையில்தான் மாற்றத்திற்கான சிந்தனை ஸ்டாலினுக்கு ஏற்பட்டிருக்கிறது.”

“மாப்பிள்ளை மூலம், இது தொடர்பாக அமைச்சர் துரைமுருகனுக்கு அதிர்ச்சி கொடுக்கப்பட்டிருக்கிறதே?”

“உண்மைதாங்க தலவரே.. கடந்த வாரம் மாப்பிள்ளை, அமைச்சர் துரைமுருகனை அழைத்திருக்கிறார். அதன்பேரில் அவரை சந்திக்க துரைமுருகன் சென்றபோது, சில காரணங்களால் இந்த சந்திப்பு நடக்கவில்லை. இதற்கிடையே, துரைமுருகனிடம் போனில் விவாதித்துள்ளார். அப்போது, பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நீங்கள் விலக வேண்டும் என தலைமை விரும்புகிறது. கருத்து வேற்றுமை இல்லாமல் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து விலகும் கடிதத்தை ஒப்படையுங்கள் என்று சொல்லியிருக்கிறார். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளார் துரைமுருகன். காட்பாடியிலிருந்து விரைந்து சென்னைக்கு வந்தவர், ஸ்டாலினை சந்திக்க முயற்சித்துள்ளார்... வாய்ப்பு அமையவில்லை. வேறுவழி இல்லாததால், துரைமுருகன், இதற்கான விலகல் கடிதத்தை விரைவில் ஸ்டாலினிடம் ஒப்படைப்பார் என்கிறது அறிவாலயத் தரப்பு. இதைத் தொடர்ந்து, செப்டம்பர் 15ஆம் தேதி தி.மு.க.வில் புதிய பொதுச்செயலாளராக டி.ஆர்.பாலுவும் பொருளாளராக எ.வ.வேலுவும் பதவி



## சின்னக்குத்தூசி நினைவு விருதுவிழா!

மூத்த பத்திரிகையாளர் சின்னகுத்தூசி 91-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் 21, 2025 அன்று மயிலாப்பூர் கவிக்கோ அரங்கில் திராவிட இயக்க சிந்தனையாளர் செல்வேந்திரனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும், 1 லட்ச ரூபாய் நிதியும் வழங்கப்பட்டது. விருதினை தமிழ்த் தேசிய இயக்க நிறுவனரும், மூத்த அரசியல்வாதியுமான ஐயா பழ.நெடுமாறன் வழங்கி கௌரவித்தார். விழாவுக்கு திராவிட இயக்க சிந்தனையாளர் க.திருநாவுக்கரசர் தலைமையேற்க, விழாவில் பங்கேற்கவந்த அனைவரையும் நக்கீரன் ஆசிரியர் வரவேற்றுப் பேசினார். விழா நிகழ்வு குறித்த விரிவான கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்.

(-ஆர்.)



கிண்டி மருத்துவமனையில் அமைச்சர் மா.சு. ஆய்வு

# கூடுதல் சீட் கேட்கும் கூட்டணிக் கட்சிகள்! தி.மு.க. சமாளிக்குமா?



செல்வப்பெருந்தகை

ஏற்கலாம் என்கிற தகவலும் இப்போது தி.மு.க.வில் சிறகடிக்கிறது.”

“அமைச்சர் நேருவின் சகோதரர் மீது நில மோசடி வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறதே?

“அமைச்சர் கே.என்.நேருவின் தம்பி மணிவண்ணன் மீது, ஸ்ரீரங்கம் அன்னதான சத்திரத்தைச் சேர்ந்த செட்டியார் மரபினர் நில மோசடிப் புகாரோடு கோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருகிறார்கள். தங்கள் அன்னதான சத்திரத்துக்குச் சொந்தமான 800 ஏக்கர் இடத்தில் 40 ஏக்கரை, அமைச்சரின் தம்பி மணிவண்ணன், அமைச்சரின் செல்வாக்கைப் பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்து, வெறும் 50 லட்ச ரூபாய்க்கு கிரயம் செய்துகொண்டிருப்பதாக அவர்கள் குற்றம்சாட்டியிருக்கிறார்கள். இதற்கான பத்திரப் பதிவு, மணிவண்ணன் வசிக்கும் கோவையிலேயே நடந்திருக்கிறதாம். இதைத்தொடர்ந்து மணிவண்ணன் தொடங்கி, இந்த மோசடிக்கு உதவிய அதிகாரிகள்வரை அனைவருக்கும் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறதாம். இந்த விவகாரத்தில் அமைச்சர் நேருவிற்கும் சிக்கல் வரலாம் என்கிறார்கள்.”

“தி.மு.க. தலைமைக் குடும்பத்துக்கு நெருக்கமானவர்களை மாஜி அ.தி.மு.க. மந்திரி வேலுமணி சந்தித்ததாகச் சொல்கிறார்களே?”

“டாஸ்மாக் விவகாரத்தில் சிக்கி, அமலாக்கத்துறையால் தேடப்பட்டுவந்த தி.மு.க. தலைமைக் குடும்பத்தைச் சேர்ந்த பிரமுகர்கள், இப்போது சென்னை திரும்பிவிட்டார்களாம். அமலாக்கத்துறையின் நடவடிக்கைகளுக்கு இவர்கள் நீதிமன்றத்தில் தடை ஆணை பெற்றிருக்கும் சூழலில், இவர்களில் ஒருவரை அ.தி.மு.க. மாஜி மந்திரி வேலுமணி சீக்ரெட்டாக சந்தித்திருக்கிறார். அப்போது, தனது டெல்லி செல்வாக்கை வைத்து, அவர்கள் மீதான அமலாக்கத்துறையின் நடவடிக்கை மேற்கொண்டு நகராதபடி பார்த்துக்கொள்வதாக, அவர் உறுதி கொடுத்திருக்கிறாராம். இதையறிந்த எடப்பாடி ஷாக்காகி விட்டாராம். இந்த சந்திப்பு விவகாரம் தி.மு.க. -அ.தி.மு.க. இரண்டு கட்சிகளிலும் பரபரப்பை ஏற்படுத்திவருகிறது.”

“பெண் அமைச்சரை தி.மு.க.வினரே முற்றுகையிட்டு அதிர்ச்சி கொடுத்திருக்கிறார்களே?”

“தேர்தலை எதிர்கொள்ள வசதியாக தி.மு.க., தனது கட்டமைப்பில் சில மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக, கட்சி அமைப்புகளான நகரங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றைப் பிரித்து, அவற்றுக்குப் புதிய நிர்வாகிகளையும் நியமித்து வருகிறது. அந்த வகையில், திருப்பூர் மேற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட தாராபுரம் ஒருங்கிணைந்த ஒன்றிய தி.மு.க.வினை பிரித்து, இவற்றில் 9 பஞ்சாயத்துகளை கிழக்கு ஒன்றியமாகவும் 7 பஞ்சாயத்துகளை மேற்கு ஒன்றியமாகவும் வகைப்படுத்தியுள்ளனர். ஏற்கனவே ஒ.செ.வாகப் பதவி வகித்த எஸ்.வி.செந்தில்குமாரை கிழக்கு ஒ.செ.வாகவும், கொளத்துப்பாளையம் பேரூராட்சியின் துணைத் தலைவரான கே.கே.துரைசாமியை மேற்கு ஒன்றிய செயலாளராகவும் தி.மு.க. தலைமை நியமித்தது. ஆனால் செந்தில்குமார் ஆதரவாளர்களோ மேற்கு ஒ.செ. துரைசாமியை மாற்றவேண்டும் என்று முரண்டு பிடிப்பதோடு, கடந்தவாரம் மூலனூர் ஊராட்சிக்கு உட்பட்ட

**சேதமடைந்த பயிர்களுக்கான நிவாரணத்தில் ரூ. 40 கோடி மோசடி; 11 அதிகாரிகள் சஸ்பெண்ட்**



பெரமியம் கிராமத்தில், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டப் பணிகளைத் தொடங்கிவைக்க வந்த அமைச்சர் கயல்விழி செல்வராஜை முற்றுகையிட்டு, கட்சித் தலைமைக்கு அதிர்ச்சி கொடுத்தனர். இது திருப்பூர் மேற்கு மா.செ.வாக அறிவிக்கப்பட்ட அமைச்சர் சாமிநாதனுக்கு எதிரான நடவடிக்கையாகவும் பார்க்கப்படுகிறது."

"தி.மு.க.வுக்கு எதிரான குரலை காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் பலமாக எழுப்பிவருகிறார்களே?"

"உண்மைதாங்க தலைவரே, காங்கிரஸ் கட்சியின் எம்.எல்.ஏ.க்களும் மூத்த நிர்வாகிகளும், மாவட்டத் தலைவர்களும் தி.மு.க.விடம் அதிக சீட்டுகள் கேட்போம். ஆட்சியிலும் பங்கு கேட்போம் எனத் தொடர்ச்சியாக பொது வெளியில் பேசி, நெருக்கடி கொடுத்துவருகின்றனர். சத்தியமூர்த்திபவனில், மேலிட பொறுப்பாளர்கள் முன்னிலையில் நடத்தப்படும் ஆலோசனைக் கூட்டங்களிலும் இதே குரல்களை எழுப்பும் அவர்கள், 'இதையெல்லாம் திமுக மறுத்தால், நாம் தி.மு.க. கூட்டணியை விட்டு வெளியேறலாம். விஜய் கட்சியுடன் கூட்டணி வைக்கலாம்' என்றும் ஆவேசமாகக் கூறி வருகின்றனர். இப்படிப் பேசும் நிர்வாகிகளை கட்சியின் மாநிலத் தலைவரான செல்வப்பெருந்தகை சமாதானப்படுத்த முயற்சிக்கும் போது உங்களுக்கு என்னங்க... நீங்க தி.மு.க. மேலிடத்தில் நெருக்கத்தை வைத்துக்கொண்டு ஏகப்பட்டதை சாதித்துக் கொள்கிறீர்கள். தொழிற்சாலைகளில் கிடைக்கும் ஸ்கிராப் கான்ட்ராக்ட் தொடங்கி எல்லா துறைகளிலும் ட்ரான்ஸ்ஃபர் வரை காரியம் சாதிச்சுக் கிறீங்க. ஆனால், எங்களுக்குதான் எதுவும் நடக்கமாட்டேங்குது' என்று அவரையும் திகைக்க வைத்தார்கள்."

"அதனால்தான் காங்கிரஸ் எம்.எல்.ஏ.களுடன் தி.மு.க. மேலிடத்தை அண்மையில் செல்வப்பெருந்தகை சந்தித்தாரா?"

"ஆமாங்க தலைவரே, காங்கிரஸில் எழும் எதிர்ப்புக்குரலை அடக்கும் முயற்சியில் இறங்கிய செல்வப்பெருந்தகை, தங்கள் கட்சி எம்.எல்.ஏ.க்கள் 17 பேரையும் அழைத்துக் கொண்டு, தி.மு.க.வின் மேலிடத்தை சந்தித்தார். அப்போது எம்.எல். ஏ.க்களின் ஆதங்கத்தை அங்கே விவரித்திருக் கிறார். இதனையடுத்து, மேலிடத்தின் அடுத்த நிலை அதிகார மையத்தையும் சந்தித்தனர். நீண்ட ஆலோசனை நடந்தது. இதைத்தொடர்ந்து காங்கிரசின் 'கோரிக்கை'யை நிறைவேற்றுவது குறித்து உறுதி தரப்பட்டது. இதன்பயனாக, தமிழக சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் ராஜேஷ் குமார், கடந்த சில நாட்களாக ஒவ்வொரு அமைச்சரையும் சந்தித்து ட்ரான்ஸ்ஃபர் உட்பட பல காரியத்தையும் சாதித்தபடி இருக்கிறார். காலையில் எழுந்ததுமே இன்றைக்கு எந்தெந்த அமைச்சரை சந்திக்கலாம்? அவர்களிடம் என்ன கோரிக்கை வைக்கலாம்? என பட்டியலிட்டுக் கொண்டு அவர்களை சந்திப்பதை வாடிக்கை யாகவே வைத்திருக்கிறார். இவரைப் போலவே, காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் பலரும் காரியம் சாதித்துவருகின்றனர். இருந்தும் இவர்கள் இன்னும் தி.மு.க. கூட்டணிக்கு எதிரான குரலை எழுப்பியபடியேதான் இருக்கிறார்கள்."

"ம.தி.மு.க.வும் கூடுதல் சீட் கேட்டு, தங்கள்

கலாநிதி தயாநிதி



துரைமுருகன்



டி.ஆர்.பாலு



**சத்தீஷ்காரில் 2 வாரங்களில் 7 மாவோயிஸ்டுகள் படுகொலை**

## பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்புடன் தொடர்பு; ராணுவ வீரர் உள்பட 2 பேர் கைது



### நீக்கம்!

**தி**ண்டுக்கல் மற்றும் தேனி மாவட்ட நக்கீரன் முதன்மை நிருபராக பணியாற்றி வந்த சக்திவேல், பணியிலிருந்து விடுவிக்கப்படுகிறார். நக்கீரன் செய்தி சம்பந்தமாக அவரை யாரும் தொடர்புகொள்ள வேண்டாம் என தெரிவித்துக்கொள்கிறேன்.

**-ஆசிரியர்**

பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதே?"

"ம.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம் 22 ஆம் தேதி ஈரோட்டில் நடந்தது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் 6 தொகுதிகளை தி.மு.க. கூட்டணியில் பெற்ற அக்கட்சி, இப்போது கூடுதல் சீட் கேட்போம் என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது, இதைத் தொடர்ந்து தி.மு.க.விடம் 10 சீட்வரை கேட்போம். அதே சமயம் ஆட்சியில் பங்கு கேட்கமாட்டோம் என்று அறிவித்திருக்கிறார் வைகோ. இதேபோல் காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் உட்பட தி.மு.க. கூட்டணியில் உள்ள அத்தனைக் கட்சிகளும் இந்த முறை கூடுதல் சீட் கேட்பதில் உறுதியாக இருக்கின்றன. இதை எப்படி தி.மு.க. மேனேஜ் செய்யப்போகிறது என்று எதிர்க்கட்சிகள் புன்னகையோடு கவனிக்க, தி.மு.க. தலைமையோ, இந்தமுறை காங்கிரஸுக்குக் கொடுக்கும் சீட்டுகளில் சிலவற்றைக் குறைத்துக்கொண்டு, மற்றக்கட்சிகளுக்கு கூடுதலாகக் கொடுக்க முடிவெடுத்திருக்கிறதாம். இந்த மேனேஜிங் டெக்னிக் குறித்து, தேர்தல் நெருக்கத்தில் ராகுல் காந்தியிடமே பேச திட்டமிட்டிருக்கிறாராம் ஸ்டாலின்."

"சென்னை கிண்டியில் குழந்தைகளுக்கெனவே பிரத்யேக மருத்துவமனை கட்டப்படப் போறதா சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்திருக்கிறாரே"

"ஆமாம்பா, கிண்டி கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையிலே கூடுதலாக ஆறரை ஏக்கர் பரப்பளவில் குழந்தைகள் மருத்துவத்துக்கான உயர் வசதிகளுடனான மருத்துவமனையை அமைக்க தமிழக அரசு திட்டமிடுது. இதற்காக ரூ.487 கோடி ஒதுக்கப்பட்டிருக்காம். குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு, அறுவை சிகிச்சை மருத்துவம், இரைப்பை குடல் மருத்துவம், எலும்பியல், இதயவியல் சிறப்பு சிகிச்சைகளும் இங்கே கிடைக்குமாம். இன்னும் இரண்டு வருடத்தில் இந்த மருத்துவமனை செயல்பாட்டுக்கு வருமெனவும் அவர் தெரிவித்திருக்கார். இந்த மருத்துமனை கட்டுமானத்தை வரும் செப்டம்பரில் முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கிறாராம்.

**"நானும் என் காதுக்கு வந்த ஒரு தகவலைப் பகிர்ந்துக்கறேன். கொங்கு மண்டலத்தைப் பொறுத்தவரை சிவனின் பிரகாசம் எனும் பெயர் கொண்ட ஒரு சபாரி சூட் ஆசாமி, தனக்கு சம்பந்தமே இல்லாத காவல்துறையை, ஆட்டிவைத்து வருகிறார். விளாங்குறிச்சி பகுதியைச் சேர்ந்த இவருக்கு காவல்துறையில் உள்ள அதிகாரிகள் பலரும் சல்யூட் அடித்து வருகிறார்கள்.சமீபத்தில் அங்குள்ள ஆணையர் அலுவலகத்தில் உள்ள ஒரு ரைட்டர், 'எங்கிட்ட பணம் வாங்கினீங்களே, எனக்கு எப்போது இடமாறுதல் வரும்?' என அந்த நபரிடம் கேட்க, கடுப்பான அந்த நபர், அந்த ரைட்டரை தனது செல்வாக்கால் வேறொரு இடத்திற்கு தூக்கியடித்துவிட்டாராம். இந்த நிலையில் மாநகர காவல் உயரதிகாரிக்கும் அந்த நபருக்கும் லடாய் ஏற்பட, அவரை இன்னும் 3 மாதத்தில் மாற்றிக் காட்டுகிறேன் என்று சவால் விட்டிருக்கிறாராம் அந்த சபாரி நபர்."**

●



ம.தி.மு.க. பொதுக்குழு

சங்கர்லால்




www.nakkheeran.in

PUBLISHED BY **NAKKHEERAN GOPAL** ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : **NAKKHEERAN GOPAL**,

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai-08, NAKKHEERAN TAMIL BI-WEEKLY, RNI No.: 49456/88, REGD No.TN/CH/(C)/573/2023-2025
Licensed to Post without Prepayment No.:TN/PMG(CCR) WPP-649/2023-2025 Date of Publication on posting : Every Tuesday & Friday






advt